நூலகம்

பிரிட்டிஷ் மியூஸியம் நூலகம்

புத்தகப் பணி ஏடு

பிப்ரவரி 1970. மலர் 4. இதழ் 6.

நூலகம்

ஆசிரியர் :
குயிலன்

மலர் 4 இதழ் 6

பிப்ரவரி 1970

ஆண்டுச் சந்தா ரூபாய் ஒன்பது

கார்ட்டூன்

பள்ளி நூலகம்
தலையங்கம்

டாகுமென்டேஷன்
டாக்டர்.
எஸ். ஆர். ரங்கநாதன்

நூல்களின் தலைப்புப் பக்கம்
''துர்வாசர்''

விசுவநாத சத்தியநாராயணா
மணவை முஸ்தபா

ம. பொ. சியுடன் சந்திப்பு
A. இப்ராகிம்

தி. ஜானகிராமன் சந்திப்பு
குண்டூசி கோபால்

அல்லயன்ஸ் கம்பெனி
பி. வி. சுப்பிரமணியன்

பிரிட்டிஷ் மியூசிய நூலகம்
பா. பெருமாள்.

இன்னும் பல

அலுவலகம்:
14, தணிகாசலம் செட்டி ரோடு,
தியாகராயநகர்,
சென்னை-17

தொலைபேசி எண் :
441970

NOOLAGAM
Library & Book Trade Monthly

Published by:
BIBLIOPOLE

14, Thanikachalam Chetty Road,
Madras-17
Annual Subscription Rs. 9.


தொழில்
விபத்தை தவிர்ப்பது எப்படி? ......



பள்ளி நூலகம்

தமிழ்நாடு பல துறைகளில் இந்தியாவிற்கு முன்னோடியாக விளங்குகிறது.

கல்லூரிப் படிப்பும்கூட இன்று இலவசம்தான். தமிழகத்தில் படிப்போர் தொகை நாளும் பெருகிவருகிறது. அறியாமை அகன்று, கல்வி அறிவு ஒளி வீச ஆரம்பித்து விட்டது. வரவேற்கிறோம்.

உயர்நிலைப் பள்ளிவரை படித்துவிட்டு, படிப்பை நிறுத்தி விடுவோர் தொகை எராளம். பள்ளிப் படிப்புடன் எல்லாம் முடிந்து விடுவதில்லை. அவர்கள் தொடர்ந்து அறிவு வளர்ச்சி பெற வேண்டும். இதற்கு வழி என்ன?

அறிவியல் நூல்களைப் படிக்கும் பழக்கம் பள்ளியிலேயே தொடங்கி வைக்கப் பெறவேண்டும். இதற்கு ஒவ்வொரு பள்ளியிலும் நூலகம் இருக்கவேண்டும். அந்த நூலகங்களுக்கு பயிற்சி பெற்ற நூலகர்கள் நியமிக்கப்பட வேண்டும். மாணவர்கள் வாரம் இரு முறையாவது நூலகத்திற்குச் சென்று கட்டாயம் படிக்க வேண்டும். நூலகர்கள் அறிவு வளர்ச்சிக்கான வழிவகைகளை மாணவர்களுக்குச் சொல்லித்தரவேண்டும். ஆண்டு இறுதியில் நூலகத்தில் படித்துப் பயன் பெற்றது குறித்து தேர்வு நடத்தி, மதிப்பெண் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு செய்தால் மாணவர்கள் நூலகப்பணி பெறுவார்கள். அறிவு வளரும். ஆக்கம் பிறக்கும். இதற்கு அரசுதான் உத்தரவாதம் தரமுடியும். தமிழக அரசு இதை அவசரப் பிரச்னையாகக் கருதி, ஆவன செய்யுமா?

டாகுமென்டேஷன்

டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன்

தமிழில்: பார்த்தசாரதி பெருமாள்

ஒரு சிறு தொழில் நிறுவனம், குறிப்பிட்ட பாகம் செய்வதில், அனுபவத்தினுல், அதில் திறமை காட்டுகிறது. உற்பத்தியின் தரத்திலும் உயர்த்துகிறது.

உதாரணமாக:—

1958 மே மாதத்தில் மங்களூருக்குப் போயிருந்தேன். 1917ல் எனது ஆசிரியர் தொழிலை இங்குதான் துவக்கினேன் என்பது குறிப்பிடத்தக்கது. அப்போது எனது பழைய மாணவர் ஒருவர் ரயில் பெட்டி, மோட்டார் டிரக், குதிரை வண்டி ஆகிய போக்குவரத்து வாகனங்களுக்குப் பயன்படும் 'ஸ்பிரிங்குகள்' தயாரிப்பதில் தனித்திறமையுடன் விளங்குவதாக அறிந்தேன். இத்துறையில் அவரும் அவரது குமாரரும் 'ஸ்பிரிங்குகள்' தயாரிப்பில் பல புதிய நவீன உத்திகளைக்கண்டுபிடித்து கடைப்பிடித்து, உற்பத்தி செய்வதாகச் சொன்னுர்கள்.

இன்று இவ்வாறு நடைபெறும் என்று 1917ல் அவர் கனவுகூடக் கண்டிருக்க முடியாது. இப்போது எனது பழைய மாணவர் ஒருவரே இத்தகை செயலை அங்கு செய்வார் என்று நான் எண்ணவே இல்லை.

நவீன யுகத்தின் சிறப்பு ஆராய்ச்சிக்குள்ள முக்கியத்துவத்தை, மதிப்பை, வலியுறுத்துவதாகவே இவ்வுதாரணம் அமைந்துள்ளது.

1959ல் குஜராத் படேல் பல்கலைக் கழகத்தில் வேலிகள், முள்வேலிகள் செய்வதில் தனித்திறமை காட்டினர். இந்த வேலிகளை ரயில்வே இலாகாவும் மற்ற நிறுவனங்களும் வாங்கிக் கொண்டன. இதனுல் புதியபுதிய உத்திகளைக் கண்டுபிடித்து வேலி செய்வதில் தனித் திறமையுடன் விளங்குகிறது குஜராத் படேல் பல்கலைக்கழகம்.

இதைத்தான் தொழிற் சாலைகளின் பொருள் ஆராய்ச்சியில்–

கருத்துக்களின் ஆராய்ச்சியில் 'அடாமிசேஷன்' எனலாம்.

'ஆடமைசிட்' ஆராய்ச்சி பற்றி கட்டுரைகள் — விளக்கங்கள்

'ஆடமைசிட்' ஆராய்ச்சியினால் ஏற்படும் முடிவுகள் பருவ ஏடுகளில் மிகுதியாக வெளியாகின்றன.

அகில உலகக்கண்ணோட்டத்தில் இதை நோக்கினால், பல தொழிற் சாலைகள், ஆராய்ச்சிக் கூடங்கள் தங்களுக்கென தனியாகப் பருவ ஏடுகளை நடத்துகின்றன. மற்றவர்கள் தங்கள் ஆராய்ச்சியின் முடிவுகளைவெளியிட, பலவிஷயங் களோடு கலந்து வரும் பருவ ஏடுகளையே நம்பி வருகிறார்கள்.

ஆராய்ச்சியாளர்களுக்கு அவரவர் செய்யும் ஆராய்ச்சி பற்றிய புதிய புதிய கருத்துக்களைத் தொகுத்து அளிப்பது அவசியம். இப்படிச் செய்வதால், ஆராய்ச்சியாளரின் பொன்னான நேரம் வீணாகி விடாமல் சேமிக்கப்படுகிறது.

பொருள் தயாரிப்பாளர்களில் பலர் காலத்திற்கு ஒவ்வாத, ஒட்டாத உத்திகளைப் பயன் படுத்துவதால், கிராக்கிகுறைந்து வியாபாரம் பாதிக்கப்படக்கூடும்.

அரசு அலுவலகங்கள், வியாபார நிறுவனங்கள் ஆகியவற்றிலும் இத்தகைய 'விரயப்போக்கு' காணப்படுகிறது.

இவற்றைப் போக்க. அவ்வெல்லாம் 'டாகுமென்டேஷன்'— அதில் 'அடாமிசேஷன்' பணி மிக அவசியமென உணரப்படுகிறது.

பத்தாண்டுகளுக்கு முன்பு மத்திய அரசின் உள்நாட்டிலாகா இத்தகைய புதிய உத்தியின் வலிமையை உணர்ந்தது. அந்த இலாகா துணைக் காரியதரிசி தனது நூலகருடன் DRTCக்கு வந்தார். தனது இலாகாவில், டாகுமென்டேஷன் புகுத்துவது குறித்து வழிமுறைகளை அறிந்து சென்று, பயன்படுத்தி, பயன் பெற்றார்கள்.

உண்மை நிலையை உணரும் இத்தகைய போக்கும், பழமையை மாற்றும் எண்ணமும் உண்டாக்கிவிட்டதைப்பார்க்கும் போது, நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்படுகிறது.

இத்தகைய புதிய போக்கு, நாட்டிற்கு நல்ல எதிர்காலம் இருப்பதையே காட்டுகிறது.

நூலக உத்திகளில் அடாமிசேஷனால் விளைந்துள்ள நன்மைகள்

1. தொழிற்சாலைகள், பொருள் உற்பத்திவியாபார நிறுவனங்கள், அரசு இலாக்காக்கள் ஆகியவற்றில் 'அடாமிசேஷன்' வந்துவிட்டது.

2. தனிப்பட்ட சிறப்பு ஆராய்ச்சி சாலைகளில் கூட 'அடாமிசேஷன்' புகுந்துவிட்டது.

3. பருவ ஏடுகள் மூலமாக இன்று ஏராளமான சிறப்பு ஆராய்ச்சிக் கட்டுரைகள் மூலம் புதிய புதிய கருத்துக்கள் பல துறைகள் பற்றி வெளிவந்து குவிந்த வண்ணமுள்ளன.

4. சிறப்பு நூலகப் பணியின் தரம் உயர்த்தப்பட வேண்டும். அதன் உத்திகள் முறையாக வளர்க்கப்பட வேண்டும். பழைய முறைகள் தேவையைச் சமாளிக்க

போதுமானதாக இல்லை. கல்வி நிறுவனங்களில் கூட இதே நிலை தான்.

5. சிறப்பு ஆராய்ச்சியாளர்களுக்குத் தேவையான புதிய புதிய தகவல்களைத் தொடர்ந்து முறையாகத் தரக் கூடிய புதிய நூலகச் செயல்முறை உத்திகளைக் காண ஆராய்ச்சி செய்வது அவசியம்.

6. இப்புதிய நவீன நூலக உத்திகளைப் பயன்படுத்தி, சிறப்பு நூலகர்-டாகுமென்டேஷன் பணி புரிய வேண்டும். வாசகர்களின் கேள்விகள் - அவர்களின் தேவைகள் - டாகுமென்டேஷனலிஸ்ட் துணையுடன், ஒருங்கிணைந்த பணி புரிவது டாகுமென்ட்டலிஸ்டுகளின் சிறப்புப் பணியாகிறது.

7. சிறப்பு நூலகர்களுக்கு முன்னேறிய டாகுமென்டேஷன் பயிற்சி அவசியம் கொடுக்கப்பட வேண்டும். தொழில் ஆராய்ச்சி, அரசு நிறுவனங்களின் நூலகர்களுக்கு—நவீன, டாகுமென்டேஷன் சேவைபெற, பயிற்சி அளிப்பது அவசியம்.

நூலகத் தொழிலும், நூலகர்களும் உலகில் நடைபெறும் இத்தகைய மாற்றங்களை உணர்ந்துள்ளார்கள். காலத்தோடு, நூலகர்களும் முன்னேற வேண்டும். அப்போதுதான் திறமையான சேவை செய்து, தேவைக்கேற்ற ஊதியத்தைப் பெற முடியும்.

தொழில், ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு வேண்டுகோள்

டாகுமென்டலிஸ்டுகளாகப் பணியாற்ற விரும்புவோர், முதலில் பொது சர்வகலாசாலைப் பட்டம் பெற்று, பின் நூலக இயல் பட்டமும் பெற்று, பிறகு தான் டாகுமென்டேஷன்சிறப்புக் கல்வியும், பயிற்சியும் பெற வேண்டும்.

பேராசிரியர் மஹாலனோபிஸ் விஞ்ஞானியும், ஆட்சி நிபுணருமாவார். அவர் இந்திய திட்டக் கமிஷன் எதிர்காலத் திட்டப் பிரிவுக்கு உறுப்பினராக இருந்தார். அவர் 1955 லேயே இத்தகைய டாகுமென்டேஷன் பணியின் தேவையை உணர்ந்திருந்தார்.

1961ல் இந்திய புள்ளியியல் நிறுவனம், டாகுமென்டேஷன் ஆராய்ச்சிப் பயிற்சி மையத்தை (DRTC) நிறுவ சம்மதித்தது. பேராசிரியர் மஹாலனோபிஸ் தான் இதற்குக் காரணமாவார்.

1962ல் பெங்களூர் மல்லேஸ்வரத்தில் DRTC- துவக்கப்பட்டது

DRTC வலிமை மிக்க சுறுசுறுப்பான பயிற்சியை 14 மாதங்களுக்கு அளிக்கிறது.

கிராமப் புற மக்களுக்கென கோலாஸ் மையப்படுத்தப்பட்ட பிரசுராலயம் (மாஸ்கோ) 38 விசேஷப் பத்திரிகைகளை வெளியிட்டு வருகிறது. இதல்லாமல் யூனியன் குடியரசுகளில் 37 பத்திரிகைகள் வெளியாகின்றன. இந்தப் பத்திரிகைகளின் பிரதிகளின் கூட்டு எண்ணிக்கை 50 இலட்சத்தையும் மிஞ்சி விட்டது.

— சோவியத் செய்தி

ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் டாகுமென்டேஷன் பற்றிய பொதுக் கல்வியறிவையும், குறிப்பிட்ட தொழில் ஆராய்ச்சி நிறுவனங்களுக்கு ஏற்ற சிறப்புப் பயிற்சியையும் அளித்துவருகிறது. டாகுமென்டேஷன், ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் பயிற்சி அளிக்கிறது. இன்றைய உலகு வேகமாக வளர்ந்து முன்னேறி வருகிறது. இத்தகைய உலகில் 'டாகுமென்டேஷன்' சிறப்புப் பயிற்சி மிக மிக அவசியமாகும். எத்தகைய புதிய சூழ்நிலையையும் சமாளிக்க இப்பயிற்சி பயன்படுகிறது.

DRTCயில் ஒவ்வொரு மாணவரும் மிக நீண்ட நேரம் பணி புரிய வேண்டும். இங்குள்ள ஆசிரியர்களை, மாணவர்கள் பகல் நேரத்தில் எவ்வேளையிலும் கண்டு பேசி விளக்கம் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதனால் DRTCயிலேயே தங்கிப் படிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

DRTCயில் பயிற்சிக்குச் சேரும் மாணவர் ஒவ்வொருவரும் இரு செயல் முறைத்திட்டங்களை மேற்கொண்டு முடிக்க வேண்டும்.

முதல் திட்டத்தை DRTCயில் படிக்கும்போதேமுடிக்கவேண்டும்

இத்திட்டத்தின் விபரமாவது:

1. ஒவ்வொரு மாணவரும் தான் சார்ந்துள்ள நிறுவனத்துக்குப் பயன்படக் கூடிய 500 சமீப காலக் கட்டுரைகளைப்பட்டியலிட வேண்டும்.

2. ஆசிரியர்களின் மேற்பார்வையில் பகுப்பு முறையில் ஆழ்ந்த திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும்.

3. ஆழ்ந்த பகுப்புமுறையை உருவாக்கி அட்டவணையின் உதவியுடன் டாகுமென்டேஷன் பட்டியல் தயாரிக்க வேண்டும்.

இரண்டாவது கட்டம்-செயல் திட்டம்-படிப்பு முடிந்து தன் நிறுவனத்திற்குத் திரும்பிச் சென்று, வேலையில் சேர்ந்து பணிபுரியும் போது முடிக்க வேண்டியதாகும்.

தனது தொழிலகத்துக்கு ஏற்றதும் பொருள் ஆராய்ச்சி, வளர்ச்சிக்கு பயன்படக் கூடியதுமான நிலைமை அறிக்கை ஒன்றை விரிவாக, விளக்கமாகத் தயாரித்தளிக்க வேண்டும்.

DRTC-யில் ஆண்டுதோறும் ஒரு குறிப்பிட்ட பொருள்பற்றி டாகுமென்டேஷன் கருத்தரங்கு நடைபெறுவது வழக்கம். DRTC யின் முன்னாள், இன்னாள் மாணவர்கள், டாகுமெண்டலிஸ்டுகள் கலந்து கொண்டு பயன்பெறுவர். மிகச் சிறந்த அனுபவத்தைப் பெறுவார்கள்.

DRTC ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கடுமையாகப் பயிற்சி கொடுப்பதோடு நின்று, திருப்தி அடைந்து விடுவதில்லை.

டாகுமென்டேஷனில் இடைவிடாது தொடர்ந்து ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். இத்தகைய ஆராய்ச்சி நடைபெற வில்லையானால், டாகுமென்டேஷன் போதனையின் வலிமை குன்றி விடும். ஆகவேதான் ஆண்டுக்கு ஆறு மாணவர்கள் மட்டுமே DRTC இல் சேர்த்துக் கொள்வதென்ற நடைமுறையை—கோட்பாட்டை வகுத்து, பின்பற்றி வருகிறார்கள்.

DRTC டாகுமென்டேஷன் ஆழ்ந்த பயிற்சி விசேஷ சிறப்பு மிக்கது. ஈடு இணையற்றது. தன்னேரில்லாதது. தனித்தன்மை வாய்ந்தது. அதன் பணி இந்தியாவில் மட்டுமல்லாது உலகின் மற்ற நாடுகளிலும் உயர்வாக கருதிப் பாராட்டப் படுகிறது என்ற கருத்தை அனைத்துலக டாகுமென்டேஷன் பெடரேஷனை சார்ந்த பகுப்புமுறை ஆராய்ச்சிக் குழுத்தலைவர் வெளியிட்டு, தனது பாராட்டுதல்களையும் தெரிவித்துள்ளார்.

'டாகுமென்டேஷன்' துறையில் இந்தியா பின்தங்கி விடவில்லை என்ற செய்தி, நமக்குப் பெருமை தருவதாக அமைந்துள்ளது.

ஆகவே இந்திய தொழிற்சாலைகளும், ஆராய்ச்சிநிறுவனங்களும் இந்தியடாகுமென்டேஷன் பயிற்சியின் சிறப்பையும், லாபத்தையும் உடனடியாக உணர வேண்டும்.

'டாகுமெண்டலிஸ்டு' களாகப் பணியாற்ற, தகுதிமிக்க வல்லவர்களைத் தேர்ந்தெடுத்து, DRTC பயிற்சிக்கு அனுப்புவது அவசியம். அதற்கு செலவழிக்கும் பணம் மிகச் சிறந்த பலன்களைத் தரும்.

நஷ்டத்தைத் தவிர்க்கலாம். முதலீடு செய்யும் பணம் பல மடங்கு லாபத்துடன் திரும்பி வரும். வருவாயும் குவிய உதவி புரியும்.

இந்திய தொழிலதிபர்கள், ஆராய்ச்சி நிறுவன அதிகாரிகளுக்கு என் அன்பு வேண்டுகோள் இதுவே.

குழந்தைகளுக்கான சஞ்சிகை வெளியீட்டிற்கு அதிக அக்கறை செலுத்தப்படுகிறது. இளைஞர்களுக்கென 22 சஞ்சிகைகளும், குழந்தைகளுக்கென 25 சஞ்சிகைகளும் வெளியாகின்றன. பள்ளிக்குச் செல்லுவதற்கு முந்திய வயதுடைய குழந்தைகளுக்கான சஞ்சிகை ''மூர்ஜில்கா'' 56 இலட்சம்பிரதிகளை எட்டியுள்ளது. ''வெசியோலியே கார்தின்கி'' (குதூகல சித்திரங்கள்) 50 இலட்சம் பிரதிகளாகியிருக்கின்றது. பள்ளிக் குழந்தைகளுக்கான ''பயனீர்''. ''ஸ்நானியே-ஸிஸா (அறிவே சக்தி) ''கோஸ்தியார்'' (கேம்ப் ஃபயர்) ''யூரல்ஸ்கி ஸ்லெதோபித்'' (யூரல்களின் வழிகாட்டி) ஆகியவை அதிகப் பிரதிகள் விநியோகமாகின்றன. யூனியன்பத்திரிகைகள் அல்லாமல் ஒவ்வொரு தேசியக் குடியரசும், பல பிரதேசங்களும், குழந்தைகளுக்கான செய்தித்தாள்களையும் சஞ்சிகைகளையும் வெளியிட்டு வருகின்றன.

— சோவியத் செய்தி

வளர்க டாகுமென்டேஷன்

வாழ்க DRTC

குறிப்பு : (15-12-1969 அன்று பெங்களூர் மல்லேஸ்வரத்தில் உள்ள DRTC கருத்தரங்கில் டாக்டர் எஸ். ஆர். ரங்கநாதன் துவக்க உரையாற்றினர். அதன் தமிழ் வடிவமே இக்கட்டுரை)

பிரிட்டிஷ் மியூசிய நூலகம்

பா. பெருமாள் B. A., B. Lib. Sc.,

மிகப் பெரும் எண்ணிக்கையில் யில் புத்தகங்களும், கையெழுத்துப் பிரதிகளும் அடங்கிய நூலகம் பிரிட்டிஷ் மியூசியத்தில் உள்ள நூலகம்தான். உலகிலேயே இதுதான் மிகப் பெரிய நூலகமாகக் கருதப்படுகிறது.

''இங்கு எத்தனை புத்தகங்கள் இருக்கின்றன?''

''எத்தனை மிலியன் புத்தகங்கள் என்ற கணக்கு இல்லை; இதை எண்ணிச் சொல்வதும் சாத்தியமல்ல'' என்கிறார்கள் இந் நூலக அதிகாரிகள்,

''ஆனால் புத்தக அலமாரிகளை வரிசையாக அடுக்கிக் கொண்டே போனால்முதல் அலமாரியிலிருந்து கடைசி அலமாரிக்குச் செல்ல விமானப் பயணம் மேற்கொள்ள வேண்டும்! அவ்வளவு மைல்கள் தூரத்திற்கு இவை நீண்டு கொண்டே போகும்'' என்கிறார்கள் அந்த அதிகாரிகள்.

''இவ்வளவு புத்தகங்களை எப்படிச் சேகரித்தீர்கள்?''

''நாமே முயன்று சேகரிப்பது என்றால் இந்தப் பெரும் எண்ணிக்கை சாத்தியமல்ல என்று நினைக்கிறேன். பிரிட்டனில் வெளியிடப்படும் புத்தகங்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் ஆகிய அனைத்தும் இந்நூல் நிலையத்திற்கு அனுப்பப்படுகின்றன. வெளியிடுவோரே ஒரு பிரதியை எங்களுக்கு அனுப்பிவிடுகிறார்கள். சொல்லப்போனால் ஒரு பிரதியை இந்நூலகத்திற்கு அனுப்பவேண்டும் என்ற சட்டமே இருக்கிறது.'' (1842-ல் பிரிட்டிஷ் நாடாளுமன்றம் இதற்கு ஒரு சட்டம் செய்தது)

''மிகவும் பயனுள்ள நூலகமாகத்தான் இருக்கும்......''

''நிச்சயமாக! இங்கு இல்லாத நூல்கள், தகவல் சஞ்சிகைகள் அநேகமாக இல்லை என்றே

சொல்லலாம். எனவே உலகெங்கும் இருந்தும் பல்கலைக் கழகப் பேராசிரியர்கள், கல்வி ஸ்தாபனங்களில் பணியாற்றுவோர், பல வகை ஆராய்ச்சியாளர்கள், மாணவர்கள் ஆகியோருக்குப் பெருமளவில் உதவியிருப்பது இந் நூலகம்தான்.''

தத்துவமேதை கார்ல்மார்க்ஸ் (1818-83), இந்நூலகத்தில் தான் தனது ஆராய்ச்சிப் பணியை 1850 முதல் தொடர்ந்து நடத்தினார். தாஸ் காபிடல் (Das Kapital) 1867-ல் உருவாகியது. அகில உலக சோஷலிசக் கொள்கைகள் உருவானது இந்நூலகத்தில்தான்.

அகிம்சாமூர்த்திகாந்திஅடிகள், புரட்சியாளர்லெனின், சர்ஸ்டாப்போர்டு கிரிப்ஸ், சர் வின்ஸ்டன் சர்ச்சில் முதலிய அறிஞர்கள் இந்நூலகத்தைப் பெரிதும் பயன்படுத்தியுள்ளனர்.

''இங்கே வாசகசாலையும் உள்ளதா......?''

''இருக்கிறது. அதுவும் புது முறையில் அமைக்கப்பட்டிருக்கிறது, அமைப்பின் புதுமையைக் கணக்கிட்டால் ஐரோப்பாவில் முதலிடம் இதற்குத்தான். பரப்பைக் கணக்கிட்டால் ஐரோப்பாவில் இரண்டாவது இடம் பெறுகிறது.''

''அமைப்பில்என்ன புதுமை?''

''வட்ட வடிவமான இந்நூலகத்தின் மத்தியில் நூலகச் சிப்பந்திகள் இருப்பார்கள். அங்கிருந்து சுற்றிலும் வரிசையாக வாசகர்கள் அமர்ந்து படிக்க மேஜை, நாற்காலிகள் போடப்பட்டு, ஒவ்வொன்றிலும் கண்ணுக்கு ஏற்றவிளக்குகள் பொருத்தப்பட்டிருக்கும். மேலேயிருந்து நோக்கினல் ஏதோ சைக்கிள் சக்கரம்போல் தோன்றும் மையத்திலிருந்து புறப்படும் 'போர்க்' கம்பிகள் அமைப்பில் நாற்காலிகள் அளவாகப் போடப்பட்டுள்ளன.''

அட்டைப்படம் இக்காட்சியைத்தான் விளக்குகிறது.

''குறிப்பிட்ட புத்தகம் எங்கே இருக்கிறது என்பதை எப்படித் தெரிந்து கொள்வது?''

''சுலபமான முறையில் இதனைக் கண்டுபிடித்துச் சொல்வார்கள், இந்நூலகத்தின் தேர்ந்த பணியாளர்கள். இங்கு இருக்கும் நூல்களின் பெயர்கள் அடங்கிய பட்டியல் ஒன்றே 1500 வால்யூம்கள் உள்ளன. இது அகர வரிசையில் வரிசைப்படுத்தப் பட்டுள்ளன. குறிப்பிட்ட தலைப்புள்ள புத்தகம் எந்த இடத்தில் இருக்கிறது என்பதற்கான நம்பரும் அதிலேயே உள்ளது. உடனே கண்டு பிடுத்து எடுத்து விடுவார்கள், உள்ளே நுழைந்ததுமே தேவையான புத்தகத்தின் பெயரை எழுதிக்கொடுத்துவிட்டு வசதியான இடத்தில் உட்கார்ந்து கொள்ளலாம். அதிகபட்சம் மூன்று நிமிடங்களில் புத்தகம் உங்களைத் தேடி வரும்.''

இத்தகைய மிகப்பெரிய நூலகத்தை நிறுவிய பெருமை சர் அந்தோணி பாணிசி (Sir Anthony Panizzi)யைச் சேரும்.

பிரிட்டிஷ் மியூசியம் கி. பி. 1753 ல் தொடங்கியபொழுது, தாவர இயல் விஞ்ஞானியும் மருத்துவருமான சர் ஹேன்ஸ் லோன் (Sir Hans Sloane) என்னும் பெருமகனர் தாம் சேர்த்து வைத்திருந்தநூல்கள், கையெழுத் தேடுகள், நாணயங்கள், ஓவியங்

கள் பதக்கங்கள் ஆகியவற்றை நாட்டு மக்களுக்குப் பயன்படுமாறு குறைந்த விலைக்கு (20,000 பவுன்) அரசினருக்கு அளித்து அழியாப் புகழ் பெற்றார். இவர் அவ்வாறு உதவ நினைத்த பொழுது நாடாளு மன்றம் அவற்றை வாங்குவதற்கு முடிவு செய்தது. அவற்றோடு கார்லியன் கையெழுத்தேடுகள் (Harleian-Manuscripts) (10,000 பவுன்) சேர்க்கப்பட்டன.

காட்டோனியன் கைவயழுத்துப் பிரதிகள்(Cottonian Manuscripts) 1700-ல் வாங்கப்பட்டு இரண்டாம் ஜார்ஜ் மன்னரால் 1757-ல் சேர்க்கப்பட்டது.

கையெழுத்துப் பிரதிகள், நூலகம், பொருட்காட்கி ஆகியவற்றின் செலவிற்காகவும் ஒரு லட்சம் பவுன்கள் ஒதுக்குவதென பிரிட்டிஷ் நாடாளுமன்றம்முடிவு செய்தது.

கி. பி. 1759-ம் ஆண்டு ஜனவரி மாதம் 15-ம் தேதி, மாண்டேகு இல்லத்தில் நூலகம் ஏற்படுத்தப்பட்டு, பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

1763 ல் மூன்றும் ஜார்ஜ் மன்னர் அரசு நூலகத்தை அளிக்கவே, இடம் போதாத காரணத்தால், இன்று கவினுடன் விளங்கும் நூலகக் கட்டடத்தின் முதற் பகுதி கி. பி. 1828-ல் கட்டி முடிக்கப்பட்டது.

இந்நூலகத்தின் உலகப் புகழ் வாய்ந்த படிப்பகம் (Reading-Room) கி. பி. 1857-ல், பாணிசி (Panizzi)யால் நிர்மாணித்து, திறந்து வைக்கப்பட்டது.

இப்படிப்பகக் கட்டடத்தி லுள்ள ஸ்தூபியானது உலகத்திலேயே இரண்டாவது பெரிய ஸ்தூபியாகக் கருதப்படுகிறது. இது ரோம் நாட்டைச் சேர்ந்த பாந்தியன் (Pantheon) ஸ்தூபியைக் காட்டிலும் இரண்டடி தான் குறைவாக உள்ளது.

இந்நூலகத்தில் பெருமளவில் கீழை நாட்டு நூல்களும், கீழை நாட்டுக் கையெழுத்துச் சுவடிகளும் உள்ளன.

1799-ல் ராசர் டோப் பாதிரியார் அளித்த நூல் தொகுதிகளும், சர் சோசப்பாங்கு, 1820-ல் அளித்த அறிவியல் நூல்களும் இந்நூலக வளர்ச்சிக்குப் பெரிதும் உதவின.

இங்குள்ள கையெழுத்துச் சுவடிகள்மிகப்பழயைதும் புதியதுமாகும். (கி. மு. 3000 முதல் தற்காலம்வரை)

இங்கிலாந்து பற்றிய பழமையான வரலாற்றுச் சுவடிகள், ஆங்கில சாக்சன் அரசர்களின் எழுத்துக்கள், ஆர்த்ரேனியன் கதைகள், வெளிவராத ஆங்கிலேய எழுத்தாளரின் நூல்கள், பொன்னெழுத்தேடுகள், மிகப் பழமையான பைபிள், இலியத், ஒடிசி ஆகியவற்றின் மிகப்பழமையான ஏடுகள் முதலியன இங்கே உள்ளன.

20-ம் நூற்றுண்டின் இடைப் பகுதியில் இந்நூலகத்தில் சுமார் 6,000,000 புத்தகங்களும் 75,000 கையெழுத்துப் பிரதிகளும் இருந்தன.

இரண்டாம் உலக மகா யுத்தம் இந்நூலகத்திற்குப் பெருத்த சேதத்தை விளைவித்துவிட்டது.

150,000 நூல்கள் அழிந்து போயின. படிப்பகமும் பாதிக்கப் பட்டது.

1946-ல் மீண்டும் புதுப்பிக்கப் பட்டு, சீரிழந்தவைகள் சரி செய்யப்பட்டன.

நூல்களின் தலைப்புப் பக்கம்

" துர்வாசர் "

சமீப காலமாகத் தமிழ்நாட்டில் வெளியாகும் புத்தகங்களின் வடிவமைப்பு, தோற்றம் முதலிய அம்சங்கள் பற்றி அதிகமாகக் கவனம் செலுத்தப்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரிய விஷயம். புத்தகப் பதிப்பில் இன்னும் அதிகக் கவர்ச்சிகரமான தோற்றத்திற்கான வடிவமைப்புகளுக்கு வாய்ப்பு இருப்பதாகவே தோன்றுகிறது. ஆனால் புத்தகங்களின் விலை இதனால் அதிகரித்து விடலாம் என்ற பயமும் பதிப்பாளர்களின் தயக்கத்திற்குக் காரணமாகிறது. புத்தக விற்பனை விஷயமாக விஞ்ஞான ரீதியில் ஆராய்ச்சி மேற்கொள்ளப்படாத போது, சிறப்பான தோற்றமுடைய பதிப்புகளுக்கு அதிக விலை வைப்பதற்குப் பதிப்பாளர்கள் தயங்குவது நியாயம்தானா என்று சொல்வதற்கில்லை. புத்தகங்களை விலை கொடுத்து வாங்குவோர், முக்கியமாக நூலகங்களுடன் சம்பந்தப்பட்டவர்கள், நல்ல, கவர்ச்சிகரமான தோற்றமுடைய பதிப்புகளை விரும்புவதாயிருந்தால் பதிப்பாளர்களும் அழகான வடிவமைப்பு கொண்ட புத்தகங்களை வெளியிட முன் வருவார்கள்.

'வாசகர் வட்டத்தின்' சமீபத்திய வெளியீடான சில நூல்களின் தலைப்புப் பக்கங்களைப் பற்றி இந்தக் கட்டுரையில் ஆராய்வோம்.

ஒரு மனிதனுக்கு முகம் எப்படியோ அப்படித்தான் ஒரு நூலுக்கு அதன் தலைப்புப் பக்கமும் ஆகும். தலைப்புப் பக்கத்தின் தோற்றத்தைக் கொண்டுதான் வாசகர்கள் ஒரு புத்தகத்தை மதிப்பிடுகிறார்கள். ஒரு புத்தகத்தின் தலைப்புப் பக்கம் வாசகருக்கு சில முக்கியமான தகவல்களைத் தெரிவிக்கவேண்டும். அதாவது புத்தகத்தின் தலைப்பு, அவசியமானால் உபதலைப்பு, ஆசிரியரின் பெயர், பதிப்பாளர் பற்றிய விவரம், எத்தனாவது பதிப்பு,

பதிப்பான ஆண்டு, புத்தகம் அச்சிடப்பட்ட அச்சகத்தின் பெயர், முகவரி போன்ற தகவல்கள் வழக்கமாகத் தலைப்புப் பக்கத் தாளின் பின்புறத்தில் காணப் படும். பதிப்புரிமை பற்றிய அறிவிப்பும் அந்தப் பக்கத்தில் சேர்க் கப்படும்.

இத்தகைய தகவல்களைத் தருவதோடு ஒரு குறிப்பிட்ட புத்தகத்தின் உள்ளடக்கத்தைப் பற்றியும், தலைப்புப் பக்கம் எடுத்துக் கூறவேண்டும். இலக்கியத் தரம் கொண்ட நூல்களுக்கு இது அவசியமாகும். இந்தத் தகவல்களை அச்சிடும் முறை, தேவையான அச்சுக் கோவை, தோற்றத்தின் கலைத்திறன் முதலிய அம்சங்களில் போதிய கவனம் செலுத்தினால் அந்தத் தலைப்புப் பக்கம் குறிப்பிட்ட நூலின் பொதுநோக்கு, உள்ளுணர்ச்சி, ஆசிரியரின் தரம், பதிப்பாளரின் திறமை முதலிய பண்புகள் நன்றாகப் புலப்படும். ஆனால் இவ்வகையில் ஒரு தலைப்புப் பக்கத்தின் தோற்றம் விநோதமாக இருக்கவேண்டும் என்றால், கலை விஷயத்தில் ஒரு சோதனையாக இருக்க வேண்டும் என்பதில்லை. பயனுள்ளது என்ற அடிப்படையில் கூட ஒரு வழக்கமான தலைப்புப் பக்கம் திறமையுடன் அமைக்கப்பட்டால் புத்தகத்திற்கு ஒரு நல்ல தரத்தைக் கொடுக்கும்.

இங்கு சேர்க்கப்பட்டிருக்கும் நான்கு தலைப்புப் பக்கங்களைப் பற்றி ஆராய்வோம். இவைகளில் இரண்டு இரட்டைப் பக்க விரிப்புகள். அதாவது தலைப்பு முதலிய விவரங்கள் வழக்கமாகக் காணப் படும் வலது பக்கத் தாளில் மட்டுமல்லாமல் இடது பக்கத் தாளிலும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன. கலைத்திறன் கொண்ட தலைப்புப் பக்கங்களிலும் ஒரு குறிப்பிட்ட உணர்ச்சி தோற்றுவிக்கவேண்டும் என்ற போதும் இத்தகைய இரட்டைப் பக்க விரிப்பு முறை பயன்படுகிறது. ஆயினும் ஒரு புத்தகம் மிகவும் பிரமாதமானது அல்லது தலைப்புப் பக்க அமைப்பு விசேஷ முக்யத்துவம் கொண்டது என்றிருந்தாலொழிய ஒரு பக்கத்தில் அச்சிடப்படுவதை இரண்டு பக்கங்களில் அச்சிடுவது சரியல்ல. வீண் வேலையாகவும், வேண்டுமென்று செய்ததாகவுமே கருதப்படும்.

'மண்ணில் தெரியுது வானம்', 'பூனைக்கண்' ஆகிய இரண்டு நாவல்களுக்கும் இத்தகைய இரட்டைப்பக்க விரிப்பு அமைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் முந்தியது எளிதாகவே தோன்றுகிறது. தலைப்பு இரண்டு பக்கங்களிலும், குறுக்கே அமைக்கப்பட்டு முதல் வார்த்தையும், கடைசி வார்த்தையும் வெவ்வேறு வர்ணங்களில் அச்சிடப்பட்டிருக்கின்றன. தலைப்பின் பொருளைக் குறியீடாக எடுத்துக் காட்டும் விதத்தில் அந்த இரு சொற்களுக்கும் அனுசரணையாக மண்ணின் பழுப்பு நிறமும், வானத்தின் நீலமும் சேர்க்கப்பட்டிருக்கிறது. பாரதியின் மேற்கோளான அந்த சொற்றொடரின் பொருளும், அத்துடன் சேர்க்கப்பட்டிருக்கும் சித்திரங்களும் இணைந்து தோன்றுகின்றனவா என்பதே கேள்வி. இலக்கிய நயம் கொண்ட நுட்பமான, தத்துவஅடிப்படையிலான கதை என்பதைத் தலைப்பு குறிப்பிடுகிறது. சொற்றொடரும், தலைப்பின் அமைப்பும், இந்தக் குறிப்புடன் இணைகின்றனவா? இல்லையென்றுதான் சொல்லியாக வேண்டும். இது பதிப்பாளரைக் குறைகூறுவதல்ல. எப்படியிருந்தாலும், இந்தத் தலைப்புப் பக்கம் கண்ணைக் கவரும் முறை

யில் அமைந்திருக்கிறது என்பதை யும் சொல்ல வேண்டும்.

அடுத்த இரட்டைப் பக்க விரிப்பு ஒரு மாற்றுந்தாயின் கொடுமையினுல் ஏற்பட்ட தீராத மனநோய் பற்றிய கன்னடக் கதை ஒன்றின் தமிழாக்கமாகிய 'பூனைக்கண்' என்ற நாவலின் தலைப்பு. கதையின் நடையும் போக்கும் அதிகச் சிக்கலின்றியே இருக்கிறது. கதைப் பொருளை விஸ்தாரமாகக் கையாண்டிருப் பதே இந்த நாவலின் சிறப்பு. இவ்வகையில்தான் இந்தப் புத்த கம் தனிப்பட்டு நிற்கிறது. சாதா ரண வாசகருக்கு உளவியல் அடிப் படையிலான இந்தக் கதையின் போக்கு பற்றிப் புரிய வைக்க வேண்டுமானுல் வழக்கமான தலைப்பை விட மாறுபட்ட தலைப் புப்பக்க வடிவமைப்பு அவசியமா கிறது. இந்தக் காரணத்தை யொட்டித்தான் இரட்டைப் பக்க விரிப்பு முறை கையாளப் பட் டிருக்கிறது.

அசாதாரணமான மனப் போக்கு பற்றி விவரிக்கும் இத்த கைய புத்தகத்தின் தலைப்புப் பக்க அமைப்பிலும் ஒரு அசாதாரணத் தன்மை இருக்க வேண்டும். இந்த அமைப்பு வாசகருக்கு ஒரு அதிர்ச்சியைக் கொடுப்பதோடல் லாமல் கதையைப் படிக்க வேண்டுமென்று தூண்டவும் செய்கிறது. பூனைக் கண்களின் புகைப்படத்தைப் பயன் படுத்தி இருப்பது மிகவும் அப்பட்டமாக இருக்கிறது. இவ்வாறு தலைப்பு களை அப்பட்டமாக எடுத்துச் சொல்வது வாசகர் வட்டம் வெளியீடுகள் பலவற்றிலும் காணப்படும் குறைபாடுஎன்றே சொல்ல வேண்டும். இந்தத் தலைப்பினுல் ஒரு பயங்கர உணர்ச்சி ஏற்படுகிறது. தலைப் பின் எழுத்துக்களை செங்குத்தாக அமைத்திருப்பதும் வடிவமைப் பில் தோன்றும் பிரச்னைக்கு ஒரு தீர்வாகும்.

மொத்தத்தில் வாசகர் மனத் தில்ஏற்படும் உணர்ச்சிதெளிவாக இல்லாவிட்டாலும் அதிர்ச்சியாக அமைகிறது. தலைப்பின் நோக்க மும் இதுவாக இருக்கலாம். இதே சமயத்தில் மூல ஆசிரியர், மொழி பெயர்ப்பு ஆசிரியர், இருவரின் பெயர்களையும் இடது பக்கத்தா ளில் அச்சிட்டு இருப்பதில் ஒரு வித நேர்முறைப் போக்கு (Symmetry)க் காணப்படுகிறது. இதனுல் ஏதாவது பயனுண்டா? பொதுவாக முந்திய புத்தகத்தின் தலைப்புப் பக்கத்தைவிட இந்தப் புத்தகத்தின் தலைப்புப் பக்கம் சிறந்தது என்றே சொல்லத் தோன்றுகிறது.

அடுத்து, இரண்டு ஒன்றைப் பக்கத்தலைப்புகளைப்பார்ப்போம். அவை கலை அம்சத்தில் இரட் டைப் பக்கவிரிப்புகளை விட சிறந்

சோவியத் யூனியனில் பிரசுரிக் கப்படும் பத்திரிகைகளில் அதிக அளவு எண்ணிக்கை கொண்டது பொறியியல், தொழில் துறை பற்றிய பத்திரிகைகளாகும். அவற்றில் மொத்த எண்ணிக்கை 240. இயற்கை விஞ்ஞானம் கணிதவியல் பற்றியது — 185. சமூக அரசியல் பத்திரிகைகளின் எண்ணிக்கை 171. படம் நிறைந்த இலக்கியப் பத்திரிகைகள் — 147 என உள்ளது.

—சோவியத் யூனியன்

தவை என்பது பார்த்தவுடனேயே புலப்படும். காரணம் இவை அதிக ஆர்ப்பாட்டம் இல்லாமல் இருப்பதுதான், வடிவமைப்புகளில் எளிமையும் ஆடம்பரமின்மையும் பயன்தரும் என்பது தெளிவாகிறது. இவை இரண்டையும் விரிவாக ஆராய்வோம்.

இந்த நான்கு புத்தகங்களிலும் சாயாவனம்தான் புதியது. இந்த நாவலின் தலைப்புப் பக்க அமைப்பு வழக்கம்போல் இல்லாமல் நேர்போக்கு முறைக்கு மாறுபட்டதாக (asymmetrical) இருக்கிறது. புதுமை என்று சொல்லிக் கொள்வதற்கான குறிப்பிட்ட அம்சங்கள் ஒன்றும் கிடையாது, தலைப்பின் பொருள் தெளிவாகப் புரியும் விதத்தில் எழுத்துக்களுக்கு நிழல் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும் கையால் எழுதப்பட்ட தலைப்பில் அலங்காரம் இல்லை. எழுத்துக்கள் முனை முகப்பு இல்லாத (sans serif) மெல்லிய வகை. ஆசிரியர், பதிப்பாளர் பெயர் முதலிய தகவல்கள், வழக்கமான அச் செழுத்துக்கள். ஆகவே தலைப்பில் வசீகரம் இல்லாவிட்டாலும் பரவாயில்லை என்ற திருப்தி அளிக்கின்றது. அதிகச் சிக்கல் இல்லாத, ஆனால் பொருள் செறிந்த கதை என்பதை தலைப்பு குறிப்பிடுகிறது.

இறுதியாக, 'ஆத்மாவின் ராகங்கள்' என்ற நாவலின் தலைப்பு. இதில் கலை வேலைப்பாடு ஒன்றும் கிடையாது. எழுத்துக்களைக் கொண்டே அமைந்த வடிவம். தலைப்புப் பக்கத்தை இரண்டாக, சரிபாதியாகப் பகுத்து இரு புறங்களிலும் நூலின் தலைப்பும் ஆசிரியரின் பெயரும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. தலைப்பு

ஹிந்தி பேசாத மாநில ஹிந்தி எழுத்தாளர் கருத்தரங்கு

நாகார்ஜுனசாகர் (விஜயபுரி வடபகுதி) பிராஜக்ட் பயணிகள் மாளிகையில், ஹிந்தி வழங்காத மாநிலங்களில் உள்ள ஹிந்தி எழுத்தாளர்களின் கருத்தரங்கு ஜனவரி 12 முதல் 18 வரையில் நடைபெற்றது.

இதில் 32 ஹிந்தி எழுத்தாளர்கள் பங்கு கொண்டார்கள். துவக்க விழாவிற்கு ஆந்திர கல்வி அமைச்சர் ஸ்ரீ பி. வி. நரசிங்கராவ் தலைமை வகித்தார். மத்திய அரசு சுற்றுலா துணை மந்திரி ஸ்ரீமதி சரோஜினி மகிஷி துவக்கி வைத்தார்.

ஹிந்தி பிரசார நிறுவனங்களின் அகில இந்திய சங்கத்தாரின் சார்பில் இக் கருத்தரங்கு கூட்டப்பட்டது. தமிழ் எழுத்தாளர் சார்பில் ரா. வீழிநாதன் (உதவி ஆசிரியர், கல்கி), ர. சௌரிராஜன் (தக்ஷிண பாரத ஹிந்தி பிரசார சபா, சென்னை), டி. வேங்கடகிருஷ்ணன் (விரிவுரையாளர், விருதுநகர் கல்லூரி) மூவரும் பங்கு கொண்டார்கள்.

இந்தியாவின் ஒருமைப்பாட்டை வளர்க்க தமிழ் முதலிய பிரதேச மொழி இலக்கியங்களை ஹிந்தி மூலமாகப் பரப்ப, ''பாரதீ ஸாஹித்தியகார் பிரதிஷ்டான்'' என்ற பெயரில் அனைத்திந்திய எழுத்தாளர் சங்கம் நிறுவப்பட்டிருக்கிறது. அதன் வளர்ச்சிக்கும் செயல் திட்டங்களுக்குமான முன் முயற்சிகள் இக்கருத்தரங்கில் மேற்கொள்ளப்பட்டன. இலக்கிய சோதனைகள், மரபுகள் குறித்து கலந்துரையாடல், விமரிசனம், விளக்கம் ஆகியவையும் இடம் பெற்றன.

உதவி: சௌரி

சோவியத்நாட்டில் பெண்களுக்கான சமூக—அரசியல், மற்றும் இலக்கிய சஞ்சிகைகள் என 21 பிரசுரமாகின்றன.

— சோவியத் யூனியன்

எழுத்துக்கள் லேசான சாம்பல் நிறத்தில் (light grey screen) இரண்டு வரிகளாக அமைக்கப்பட்டிருக்கின்றன. இருவரிகளும் வலது பக்கம் ஒரே மட்டத்தில் மூடிகின்றன. ஆசிரியரின் பெயர் கொஞ்சம் சிறிய அச்செழுத்துக்களில் (Bold sans serif) தலைப்புக்கு அரை அங்குலம் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. பதிப்பாளரின் பெயர் பக்கத்தின் அடியில் அமைக்கப்பட்டிருப்பதிலும் இதே போல் சமநிலையும், எதிர்நிலையும், வேறுபாடும், ஈடுகட்டும் (balance, opposition and contrast) புலப்படுகின்றன. அச்செழுத்துக்களாலாகிய பதிப்பாளர் பெயருக்கும், சாம்பல் நிறப் பின்னணி கொண்ட தலைப்புக்கும் உள்ள வேறுபாடு வாசகர் கவனத்தை ஈர்க்கும் வகையில் இருக்கிறது. புலன்களுக்கு அப்பாற்பட்ட உணர்ச்சிகளை ஊக்குவித்து ஒரு சாதகமான சூழ்நிலை உண்டாக்குவதற்கு சாம்பல் நிறம் உதவுகிறது. இதற்கு மாறாக, ஆசிரியரின் பெயர் கருமை எழுத்துக்களில் அழுத்தமாக அமைக்கப்பட்டிருப்பது துணிச்சலும், தன்னம்பிக்கையும் நிறைந்த அந்த எழுத்தாளர் வாசகர்களின் பாராட்டைப் பெற்றவர் என்பதை எடுத்துக்காட்டும் முறையில் தோன்றுகிறது. நேர்முறைப் போக்கும் (Symmetry) பல அம்சங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியும்இதில் புலப்படுகிறது என்றாலும் தலைப்புக்களை அப்பட்டமாகச் சித்திர விளக்கம் செய்யும் பதிப்பாளரின் வழக்கம் இந்நூலில் இல்லை. நேர்முறை போக்கில் இந்த பதிப்பாளருக்கு அதிக ஈடுபாடு உண்டு என்பது இதுவரை ஆராய்ந்ததிலிருந்து தெரிகிறது.

நேர்முறை போக்குக்குமாறான, புதுமை நிறைந்த அமைப்புகளுக்கு அதிகக் கவனம் தேவை. மற்றும் இடைவெளிகளின் பயன் பற்றிய நுட்பமான உணர்வும் அவசியம். அவசரப்பட்டு, ஒரு குறிப்பிட்ட தேதிக்குள் நூல் வெளியிட வேண்டிய நிர்ப்பந்தங்கள் உள்ளபோது இத்தகைய அமைப்புகள் உருவாவது எளிதல்ல.

மொத்தத்தில் கடைசியாக எடுத்துக்கொண்ட தலைப்புதான் இந்த நான்கிலும் சிறந்தது எனத் தோன்றுகிறது. காரணம்: இதில் அதிக ஆடம்பரமில்லை. வேண்டுமென்றே கலையம்சம் புகுத்தப் படவில்லை தமிழ் அச்செழுத்துக்களில், ஆங்கிலத்தில் உள்ளதைப் போல், ரோமன், இடாலிக், சிறியது, பெரியது என்ற பல்வேறு வடிவங்கள் இல்லை என்றாலும், அச்செழுத்துக்களால் அமைக்கப்பட்ட வடிவமும் திருப்தியளிக்கக்கூடியது என்பதை இந்தத் தலைப்பு எடுத்துக் காட்டுகிறது. தமிழ் எழுத்துக்கள் அழகான வடிவம் கொண்டவை. இந்த வடிவங்களை பல்வேறு அச்சு வகைகளாக வார்க்க முடியும். நமது அச்சு வடிவப் படைப்பாளர்கள் (type designers) துணிவுடன் முயன்றாலும், அச்சகத்தார் ஊக்குவித்தாலும் எதிர் காலத்தில் புதுமை நிறைந்த சோதனைகள் மேற்கொள்ளுவதற்கு வாய்ப்புகள் உண்டு.


ந. சிதம்பர சுப்பிரமணியன்
எழுதியது
மண்ணில் தெரியுது வானம்
வாசகர் வட்டம்
சென்னை-17


சாயாவனம்
சா. கந்தசாமி
வாசகர் வட்டம்
சென்னை-17

பூனைக்
கண்
கன்னட மூலம்:
ஸ்ரீமதி திரிவேணி
தமிழாக்கம்:
எஸ். கே. சீதாதேவி
வாசகர் வட்டம்
சென்னை - 17



ஆத்மாவின்
ராகங்கள்
நா. பார்த்தசாரதி
வாசகர்
வட்டம்
சென்னை - 17

7 - FEB 1970

ம. பொ. சி யுடன் ஒரு சந்திப்பு

A. இப்ராகிம் P. R. O., தமிழ்நாடு நூலகர்கள் சங்கம்



கேள்வி: பொது நூலக இயக்கம் தமிழகத்தில் துவக்கப்பட்ட காலத்தில் சென்னை மாவட்ட நூலக ஆணைக் குழுவின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் வாய்ப்பைப் பெற்றிருந்தவர் என்ற முறையில் தங்களின் அனுபவங்களை நினைவு கூற இயலுமா?

ம.பொ சி: அப்படியே ஆகட்டும். நூலகச் சட்டம் இந்த மாநிலத்தில்தான் முதன் முதலாகப் பிறந்தது. அது திறன் பட செயல்படத் தொடங்கியது சென்னை நகரில்தான். அதற்கு நான் தலைவனாக இருந்ததால் அந்தப் புண்ணியத்தில் எனக்கு முதல் பங்கு உண்டு.

கே: கடந்த பதினைந்தாண்டு கால பொது நூலகத் துறை

வளர்ச்சி பற்றி தங்களின் மதிப்பீட்டை அளிக்க இயலுமா?

ப: எவ்வளவு வளர்ந்திருக்க முடியுமோ அவ்வளவு வளரவில்லை என்பது எனக்குள்ள குறை. அதற்கான முதல் காரணம் டி. பி. ஐ. என்பவரிடமிருந்து எடுபட்டு, டி. பி. எல், என்ஒரு பதவியை அமைத்து, அவரிடம் நூலகத் துறையை தனிப் பொறுப்பாக ஒப்புவிக்காததேயாகும். டி. பி. எல். தனியாக வேண்டுமென்று நான்தான் முதன்முதலில் கூறத் தொடங்கினேன். இப்போது ஆந்திராவிலும், கர்னடகத்திலும் டி. பி எல். நியமிக்கப் பட்டிருக்கிறார்கள். நூலகச் சட்டம் காண்பதில் பிறமாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருந்த தமிழகம் டி. பி. எல். நியமிப்பதில் ஏனோ பின் தங்கிவிட்டது. இன்னொரு காரணம், மாவட்ட நூலகக் குழுவின் செயலாளர் டி. இ. ஒ. வாக இருப்பது. அவர், டி.பி.ஐ. ஆணையை அமுல் நடத்துவதா நூலகக் குழுவின் தலைவர் ஆணையை அமுல் நடத்துவதா என்ற சிக்கல் ஏற்படும்போது, தான் நூலகக் குழுவின் செயலாளர் என்பதை மறந்து டி.இ.ஒ. வாகவே செயல்படுகிறார். ஆகவே நூலகக் குழுவின் தலைவர் போல், செயலாளரும் உத்தியோகப் பற்றற்றவராக இருந்தால் இந்த இயக்கம் வளரும்.

கே: நிறைய எண்ணிக்கையில் நூலகங்கள் இருப்பது சரி என நினைக்கிறீர்களா? அல்லது குறைந்த எண்ணிக்கையில் நூலகங்கள் இருந்தாலும் எல்லா வசதிகளுடனும் அவை இருப்பது சரி என்று கருதுகிறீர்களா?

ப: இது மாவட்ட நூலகத் துறையின் வருவாயைப் பொறுத்து இருக்கிறது. ஒவ்வொரு கிராமத்துக்கும் நூலகம் தேவை என்பது இறுதி லட்சியமாக இருக்கவேண்டும். இதை நினைவில் கொண்டு இப்போதைய வருவாய்க்கேற்ப, குறைந்த எண்ணிக்கையில், சிறந்த நூலகங்களை நடத்துவதுதான் நல்லமுறை.

கே: நூலக நிதி அமைப்பு பற்றுக் குறையைப் போக்க புதிய ஆலோசனைகள் ஏதும் கூற முடியுமா?

ப: நூலக நிதிக்கு இப்போதுள்ள வருவாயை சிறிது உயர்த்தலாம் என்பது என் கருத்து. ஆனால் நூலகத்தின் தேவையை-தற்போதிருக்கும் நூலகக் குழுக்கள் ஆற்றிவரும் பணியை பொது மக்களுக்கும், போதிய அளவு நாம் உணர்த்தவில்லை. அதனல் வரியை உயர்த்துவதில் சங்கடமிருக்கலாம். இதைவிட பொது மக்களிடமிருந்து கட்டிடங்கள் காலிமனைகள், நூல்கள் வாங்க பண உதவிகள் ஆகியவற்றை திரட்டுவதற்கு நூலகக் குழு உற்சாகமாகப்பணியாற்றவேண்டும். குறிப்பாக தேவாலய கோயில்களின் நிதிகளிலிருந்து உதவி பெறலாம்.

கே: நூலக நிதியில் முக்கால் பகுதியை நிர்வாகச் செலவுகளுக்காக இன்று பயன் படுத்துவது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப: இந்தக் குறை அரசாங்க நிர்வாகத்துடன் சேர்ந்து பிறந்த ஒரு சாபக்கேடு. நூலகக் குழுக்களின் தலைவர்கள் மாநாடு கூடி நிர்வாக விகிதத்திற்கான செலவுகளை வரையறுத்து இதை தவிர்க்கலாம். நூலகக் குழுக்கள் பல்கலைக்கழகங்களின் பணியிலே ஒரு பங்கை ஏற்றுக்கொண்டுள்ளன.

இதனை மத்திய அரசுக்கு உணர்த்தி, பல்கலைக்கழக மானிய கமிஷனிடமிருந்து ஏதேனும் ஓர் அம்சத்தைக் குறிப்பிட்டு பொருளுதவி கோரலாம்.

கே: பொது நூலகத் துறையின் வளர்ச்சிக்காக வாசகர் இயக்கம் எந்தெந்த வகையில் செயல்படலாம்?

ப: நூலகக் குழுவின் பணியை பொதுமக்களுக்கு உணர்த்த வாசகர் இயக்கம் பயன்படலாம். இந்த இயக்கத்தால் நாளிதழ் நடத்துவோரை அணுகி நூலக இயக்கம் பற்றிய கட்டுரைகளை பிரசுரிக்குமாறு கோரலாம். நாடகக் கலைஞர்கள், திரைப்படத் தயாரிப்பாளர்கள் ஆகியோரை அணுகி அவர்கள் தயாரிக்கும் கதைகளிலே, நூலக இயக்கம் பற்றிய கருத்துக்களோ, காட்சிகளோ, இடம் பெறுமாறு செய்யலாம். நகரங்களிலே நடைபெறும் கண்காட்சிகளும் நூலக இயக்கத்தின் சார்பில் ஒருஸ்டால் அமைத்து இயக்க வளர்ச்சியை புள்ளி விவரங்களுடன் அங்கு போதிக்கலாம். கோயில்களிலே பிரம்மோற்சவம் நடக்குங்கால் மக்கள் அதிகமாகக் கூடும் நாட்களிலே "மொபைல் வேன்களை" சுற்றிவரச் செய்து மக்களுக்கு காட்சிப்படுத்தலாம். அரசியல் கட்சிகளின் வருடாந்திர மாநாடுகளிலே வாசக இயக்கத்தின் சார்பில் அங்கு குழுமுவோர் விரும்பத்தக்க நூல்களைத் திரட்டி விற்கலாம்.

கே: நூலகங்களுக்கு நூல்கள் வாங்க புத்தகத் தேர்வு செய்யப்படும் இப்போதைய நடைமுறைகள் பற்றி தங்கள் கருத்து என்ன?

நூலகம் வளருகிறது

தமிழக அரசு 1948 முதல் நூலகங்களை ஆரம்பித்துப் பாடுபட்டு வருகிறது என்றாலும், இப்போது அதிகமான அளவில் படிப்பவர்கள் எண்ணிக்கை பெருகுகிறது. அதே போல் நூல்களை அன்பளிப்பாகவழங்கும் நல்ல உள்ளத்தை காட்டுபவர் தொகையும் வளருகிறது. இது நூலகவளர்ச்சியின் அறிகுறியைக் காட்டுகிறது.

—தமிழக முதல்வர் மு. க.

மாற்று யோசனைகள் ஏதும் அளிக்க விரும்புகிறீர்களா?

ப; நூலக இயக்கம் ஆரம்பமான காலத்திலே நூல்களைத் தேர்ந்தெடுப்பதில் பெரும் குழப்பம் இருந்தது. D.P.I. அலுவலகத்தார், சிபாரிசு செய்வதைத்தான் நூலகக் குழு வாங்க வேண்டுமென்று ஓர் அபிப்ராயம் இருந்து வந்தது. D.P.I. அலுவலகத்தார் பள்ளிக்கூடங்களில் உள்ள நூல் நிலையங்களுக்கு என வாங்க வேண்டிய புத்தகங்களை சிபாரிசு செய்கிறார்கள். அந்தப் பட்டியலோடு நூலகக் குழு திருப்தி அடைந்துவிட முடியாது. குறிப்பாக அரசியல் கட்சிப் பிரச்சார நூல்கள், பள்ளிக்கூடங்களிலே தேவைப்படாமல் இருக்கலாம்; ஆனால் பொதுமக்களுக்கான நூலகங்களிலே அவை இருந்தாக வேண்டும். அதனால் புத்தகங்களைத் தேர்ந்தெடுப்பதில், நூலகக் குழுக்கள் சுதந்திரமாக செயல்படும் முறையை நான் தொடங்கிவைத்தேன். ஆனால் இதில் எச்சரிக்கை தேவை. வேண்டுமென்றே துவேஷ எண்ணங்களை

புகுத்தக்கூடிய புத்தகங்களையோ, காம உணர்ச்சிகளைத் தூண்டக் கூடிய மட்டரகமான புத்தகங் களையோ, நூலகங்கள் வாங்கக் கூடாது. குறிப்பாக விஷய ஞானத்தை வளர்க்கக்கூடிய நூல் களை வாங்குவதற்கே பணத்தை செலவழிக்கவேண்டும். போதிய பண வசதி இருந்தாலொழிய பத்திரிகைகளை வாங்குவதற்கு அதிகப் பணம் செலவழிக்கக் கூடாது.

கே: பொது நூலக இயக்கம் திட்டமிட்டு செயல் படாததன் விளைவாகத்தான் தமிழ்ப் புத்தக வெளியீட்டுத் துறை கடந்த இரண்டு மூன்று வருடங்களாக முடங்கிப்போய் விட்டது என சில பதிப்பாளர்கள் குறை படு வது பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப: இதைவிட நூல் வெளி யீட்டாளரிடமுள்ள குறைதான் காரணம் என்று நான் சொல்கி றேன். நூலக இயக்கத்தை நூல் வெளியீட்டாளர்கள் தவருன முறையில் லாபத்தையே குறிக் கோளாகக் கொண்டு பயன் படுத் திஞர்கள் என்பதற்கு என்னிடம் நிறைய தகவல்கள் உள்ளன. இந் தத் தவற்றை நினைவில்கொண்டு அரசாங்க அதிகாரிகள் இயக்கமே தேங்கிப் போகும் அளவிற்கு கண் டிப்பு காட்டினர். இதுவும் தவறு. நூலகக் குழுக்களில் தலைவர்களும் மாநில நூலகக் குழுவின் இயக்கு னரும் கூடி நூல் வெளியிட்டாளர் கள் கடைபிடிக்கும் தந்திரங்களை கண்டு பிடித்து அப்படிச் செய்யும் பதிப்பகங்களை, கண்டிப்பாக பகிஷ்கரிக்க வேண்டும். இயக் கத்தை தேங்கவிடக் கூடாது. இதனை மாநில அளவில் அமுல் நடத்த நூலகக் குழுக்களின் தலை வர்கள் ஒற்றுமையாக முயற்சி எடுக்கவேண்டும்.

கே: இலவசப் பொது நூலக இயக்கம் துவங்கிய பின்னர், தனிப்பட்ட முறையில், புத்தகங் கள் வாங்குவோரின் எண்ணிக் கை வெகுவாகப் பாதிக்கப்பட்டு விட்டதாக பதிப்பாளர்கள் உணர்வது பற்றி என்ன நினைக் கிறீர்கள்?

ப: இது அவர்கள் சொல்லு மளவிற்கு உண்மை இல்லாவிட் டாலும் ஓரளவுக்கு உண்மை யாக இருக்கக்கூடும். இதற்கான பிரச்சாரங்கள் இரண்டு. ஒன்று வாசகர்கள் எண்ணிக்கை பெருக பிரச்சாரம் வேண்டும். இரண்டாவது நூல் வெளியிட் டாளர்கள், வாசகர்களைத் தனியே அணுகி தங்கள் நூல்களை விற்க முயலவேண்டும். அதற்கு வசதி யாக நூலகங்களிடமிருந்து, வாசகர்களின் பட்டியலைப் பெற வேண்டும். ஆங்கிலப் புததகங் களைப் பொறுத்த வரையில் ''ஹிக்கின் பாதம்ஸ்'' கம்பெனி இப்படித்தான் நடத்துகிறது.

கே: நூலகத்துறை நிர்வாகச் சீரமைப்பு என்ன மாதிரி அமைந் தால் நூலக இயக்கத்தின் வளர்ச்சி சிறப்பாக இருக்கும்?

ப: ஆரம்ப திசையில் உள்ள இயக்கத்தில் ஆட் குறைப்பின் மூலம் செலவைச் சிக்கனப்படுத்த வாய்ப்பே இல்லை. பொதுவாக ஆடம்பரத்தை குறைக்க முயல லாம். ஏற்கனவே சொன்னது போன்று, செயலாளரை உத்தி யோகப் பற்றற்றவராகச் செய்ய வும், D.P.L. நியமிக்கவும், நூல கச் சட்டத்தைத் திருத்தலாம். இன்னும், நூலகக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், வாசகர் இயக்கத்தின் பிரதிநிதி கள் நூல் வெளியீட்டகங்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கூட்டு

மாநாட்டைக் கூட்டி இதுபற்றி அவர்களின் கருத்தைஅறியலாம். கிராமங்களிலே தனியாகக் கட்டிடம், கட்டிடங்களில்லாவிடில், கோயிலில் ஒரு பகுதியை நூல் நிலையமாகச் செய்ய முயன்றால் செலவு குறையும்.

கே: பொது நூலகர்களின் சம்பள விகிதம், கல்லூரிகளில் பணியாற்றும் நூலகர்களின் சம்பள விகிதத்தில் சரிபாதியாக இருப்பதின் விளைவாக, சிறந்த நூலகர்கள் பொது நூலகத் துறைக்கு வர முடியவில்லை என்று நூலகர்களிடையே குறை இருப்பது பற்றி என்ன கருதுகிறீர்கள்?

ப; பொதுவாக நூலகர்களின் சம்பள விகிதத்தில் கல்லூரி நூலகங்களுக்கும், பொது நூலகங்களுக்கும் வேற்றுமை இருப்பதை நான் விரும்பவில்லை. வேலையைப் பொறுத்தவரையில், பொது நூலகங்களின் நூலகர்களுக்குத் தான் அதிக வேலை இருக்கு மென்று நான் நினைக்கிறேன். ஆனால் இதெல்லாம் வெற்றிபெறுவதிலே வருவாய் உயர்வைப் பொறுத்திருக்கிறது.

கே: பொது நூலகத் துறையில் இன்னும் நெருக்கமாக இருந்து தாங்கள் ஏன் பணியாற்றக் கூடாது?

ப: பொதுப் பணியிலே ஒரு பகுதியாகவே நூலக இயக்கப் பணியை நான் கருதி வந்தேன். சென்னை மாவட்ட நூலகக் குழுவின் தலைவர் பதவியிலிருந்து விலகிய பின்னரும், இந்தப் பணியில் தொடர்ந்து கவனம் செலுத்தி வருகிறேன். குறிப்பாக சட்ட மன்ற உறுப்பினர் ஆன பின் ஆண்டுதோறும், கல்வி மானியத்தின் மீது பேசுகையில், D. P. L. பதவி நியமனம் பற்றி வற்புறுத்தி வருகிறேன். ஒரு தனி மனிதனாக இருந்து எவ்வளவு தொண்டு செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்ய எனக்கு விருப்பமுண்டு. நூலகக் குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், நூல் வெளியீட்டகங்களின் பிரதிநிதிகள், வாசகர்கள் அடங்கிய கூட்டு மாநாட்டைக் கூட்டி அதிலே நானும் கலந்து கொள்ளும்படி, செய்தால் பழையபடி ஆலோசனைகளைச் சொல்ல முடியும்.

நேஷனல் ஜியாகரபிகல் மாகஸீன்

நேஷனல் ஜியாகரபிகல் மாகஸீன் (National Geographical Magazine) உலகப் புகழ் பெற்ற ஒரு பத்திரிகை. அதில் வரும் விஷயங்களைப் படித்து பயன் அடையலாம்; போற்றிப் பாதுகாக்கலாம். உலகின் சிறப்பான இடங்களைப் பற்றியும் மகத்தான நிகழ்ச்சிகளைப்பற்றியும் திறமை மிகுந்த எழுத்தாளர்களையும் புகைப்பட வல்லுநர்களையும் கொண்டு கட்டுரைகள் வெளியிடுகிறார்கள்.

சைனாவின் கேவ் டெம்பிள்ஸ் (குகைக் கோவில்களை)ப் பற்றி எழுதி உள்ள அவர்கள் தமிழகத்தின் 'ஷோர் டெம்பிள்ஸ்' பற்றி சமீபகாலம் வரை அறியாமல் இருந்திருக்கிறார்கள்.

அல்லயன்ஸ் கம்பெனி

பி. வி. சுப்பிரமணியன்

'இலக்கியத் தொழில், பொருளை இலக்காகக் கொள்ளாமல் மக்களுடைய அறிவை வளர்ப்பதற்காக இருக்க வேண்டும்' என்ற கருத்துடன் ஒருவர் நூல் வெளியீட்டுத் தொழிலில் இறங்கினரென்றால் அதன் விளைவு எப்படியிருக்கும் என்பதை ஊகித்தறிவதற்கு அதிகக் கற்பனை தேவையில்லை. 'அல்லயன்ஸ் கம்பெனி'யைச் சுமார் 1901ல் தொடங்கிய குப்புசாமி அய்யர் முன்கூறியவாறு கூறியது மட்டுமல்ல; அதைச் செயல் முறையிலும் கடைப்பிடித்தபோது அதிலுள்ள கஷ்டத்தை வெகு விரைவில் அறிந்து கொண்டார். தமது கருத்தை ஓரளவு மாற்றிக் கொள்ள வேண்டியதாயிற்று. அந்த நிலையிலும் பணம் சம்பாதிக்கவேண்டுமென்ற நோக்கத்தை அவர் கைவிட்டாரே தவிர, 'மக்கள் அறிவை வளர்க்கும் நூல்களை வெளியிட வேண்டும்' என்ற பகுதியை இதுவரை விடவில்லை. அவர் காலமாகி பல ஆண்டுகளாகிவிட்ட போதிலும் அல்லயன்ஸின் மதிப்பு இன்றும் தமிழர்களிடையில் குறையாமலிருக்கிறது.

நூல் வெளியிடும் முயற்சி மிகக் குறைவாக இருந்தகாலம் அது. அப்போது அவரும் அவருடைய தம்பியுமாகச் சேர்ந்து அல்லயன்ஸாக (கூட்டாக)த் தொடங்கிய பணியே 'அல்லயன்ஸ் கம்பெனி'. அடுத்த சில ஆண்டுகளில் அவருக்கும் தம்பிக்கும் கருத்து வேற்றுமை ஏற்பட்டது. அதன் விளைவாக அல்லயன்ஸ் கம்பெனியை குப்புசாமி ஐயர் தன்னந்தனியாக நடத்த வேண்டியதாயிற்று.

ஆரம்பகாலத்தில் 'விவேக போதினி' என்ற மாதப்பத்திரிகையொன்றை அவர் நடத்தி வந்தார். நண்பர் பி.ஸ்ரீ.போன்ற இலக்கிய ரசிகர்கள் அதில் எழுதி வந்தனர். எவ்வளவோ பணக் கஷ்டங்களிடையில் அதை ஆசிரியர் நடத்திய போதிலும், 'விஷய

தானம் செய்பவர்களுக்கு உசிதம் போல் சன்மானம் அளிக்கப்படும்' என்ற வாக்குறுதியை 'விவேக போதினி' கைவிட்டதில்லை. 'உசிதம்போல்' என்பதன் பொருள் மட்டும் அவ்வப்போது மாறும். கட்டுரைகளுக்குக் கொடுக்கப் படும் பணம் சில சமயம் ஐந்து ரூபாயாக இருக்கும், சில சமயங் களில் அது பத்து ரூபாயாக மாறும். கட்டுரை வெளியான இரண்டொரு மாதங்களுக்குள் இந்த ஐந்தோ, பத்தோ சிலருக்கு வரும். சிலருக்கு ஏழெட்டு மாதங் களுக்குப் பிறகு, — இவரிட மிருந்து இனி பணம் வராது என்று எழுத்தாளர் தீர்மானித்து விட்ட பிறகு — எதிர்பாராமல் குப்புசாமி ஐயரிடமிருந்து பணம் வந்து நிற்கும்,

'விவேக போதினி' யுடன், இந்தியப் பண்பாட்டின் உயர்வை விளக்கும் சிறந்த நூல்களையும் குப்புசாமி ஐயர் வெளியிடத் தொடங்கினர். திருப்புகழ் விரிவுரை, பி. ஸ்ரீ. எழுதிய ஆண்டாள் திருப்பாவை, பெரியாழ்வார் முதலிய நூல்கள் வெளியா யின. தி.ஜ ர. அவர்களின் கட்டுரைகளில் ஐயருக்கு மிகவும் ஈடு பாடு உண்டு. அக்கட்டுரைகளில் சில பகுதிகளை எடுத்து 'விவேக போதினி'யில் பிரசுரித்து வந்தார். இதனுல் அவ்விருவரிடை யிலும் நட்பு தோன்றி வளர்ந்தது. தி.ஜ.ர. தமது இரு கதைகளையும் நூலாக வெளியிடுவதற் காக 'அல்லயன்ஸ்' பிரசுராலயத் திற்கு அனுப்பியிருந்தார். பல ஆண்டுகள் சென்றபோதிலும் அது வெளியாகவில்லை. அப்போது காரைக்குடி 'ஊழியன்' பத்திரிகையில் இருந்த தி. ஜ. ர. சென்னைக்கு வந்தார். செட்டி நாட்டுப் பெருவளத்தின் சின்னங் களாக உருவெடுத்திருந்த பெரிய பெரிய கட்டிடங்களிலிருந்து

இரவல் நூல்

பீரோக்களில் வரிசையாகப் புத்தகங்களை அடுக்கி விட்டு, மற்றவர்கள் பார்த்து 'இவன் எவ்வளவு புத்தகங்களை படிக்கிருன்' என்று மலைக்கட்டும் என்று நினைத்து வைத்திருப்பவர் களும் உண்டு.

இரவல் வாங்கிச் சென்று, 'நாளை தருகிறேன்' என்று கூறி, 'எங்கு அவன் ஞாபகத்தோடு கேட்கப் போகிருன்?' என்று எடுத்துச் செல்பவர்களும் உண்டு!

—தமிழக முதல்வர் மு. க.

சென்னைக்கு வந்திருந்த தி. ஜ. ர. 'அல்லயன்ஸ் கம்பெனி எங்கே இருக்கிறது?' என்று மயிலாப் பூரில் விசாரித்தார். பிரசுராலயம் என்றுல் கபாலி ஆலயத்தை விடப் பெரியதாயிருக்குமென்ற நினைவு அவருக்கு.

'அதோ அதுதான்' என்று பி. எஸ். ஹைஸ்கூலுக்கு எதிரிலிருந்த ஓரிடத்தை ஒருவர் சுட்டிக் காட்டினுர்.

அவர் காட்டிய இடத்தில் திறந்த வெளியையும் ஒரு குடிசையையும் தவிர வேறு ஒன்று மில்லை.

'எது?'

'அதோ தெரிகிறகுடிசைதான்' என்று அங்கிருந்தவர் விளக்கி வைத்தார். தி.ஜ.ர. குடிசையில் நுழைந்தபோது, கீழே மண் தரையில் உட்கார்ந்து குப்புசாமி அய்யர் ஏதோ சில காகிதங்களைத் தட்டி எடுத்து வைத்துக்கொண்

டிருந்தார். தன்னை அறிமுகம் செய்து கொண்டபிறகு, 'என்ன அப்படித் தட்டிக் கொண்டிருக்கிறீர்கள்?' என்று கேட்டார்.

'இதெல்லாம் எழுத்தாளர் அனுப்பிய கையெழுத்துப் பிரதிகள். இந்த இடத்தில் கரையான் தொல்லை அதிகமாக இருக்கிறது. சிலவற்றை அவை தின்று விட்டன'.

தி.ஜ.ர. வுக்குத் திகீரென்றது. 'நான் அனுப்பிய கதைகளைக் கூடத் தின்று விட்டனவோ?'

'சேச்சே, அப்படியெல்லாம் இருக்காது.'

'என்ன அவ்வளவு நிச்சயமாகக் கூறுகிறீர்கள்? இங்குள்ள கரையான்களுக்கு எதைத் தின்ன வேண்டும், எதைத் தின்னக் கூடாது என்று தெரியுமோ!'

ஒரு விதத்தில் அவர் நினைத்தது சரியாகிவிட்டது. அவர் கொடுத்த கதைகளைக் கரையான் தான் தின்று விட்டது என்று கூறுவதற்குப் போதிய ஆதாரமில்லை. ஆனால் கதைகள் மீண்டும் ஆசிரியர் கைக்குவரவுமில்லை. அப்போது அவை வெளியாகவுமில்லை. பிரசுரத்திற்கு அவற்றை எடுத்துக் கொள்ளாததற்குக் காரணம் போதிய பணவசதியுமில்லை, இடவசதியுமில்லை என்று அல்லயன்ஸ்காரர் தெரிவித்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு, அவர் மயிலை கபாலி குளத்துக்கு எதிரில் இப்போதிருக்கும் வீட்டுக்கு வந்தபிறகு, இடவசதி கஷ்டம் ஓரளவு தீர்ந்தது என்றாலும் பணவசதி மட்டும் ஏற்படவில்லை. அப்போது 'விவேக போதினி'யை நிறுத்திவிட்டு, புத்தக வெளியீட்டை மட்டும் தொடர்ந்து நடத்திவந்தார். அவருடைய பணக்கஷ்டத்தை விளக்குவதற்கு அவர் 'கலைமகள்' பத்திரிகையில் சேர்ந்து வேலைசெய்யத் தொடங்கினார் என்ற ஒன்றே போதுமானது. ஆயினும் நண்பர் பி. ஸ்ரீ, அவரை அக்காலத்தில் சந்தித்தபோது 'வெளியீடுகளினால் பணம் புரளாவிட்டாலும் பெருமை கிடைத்திருக்கிறது,' என்று கூறித் திருப்திப்பட்டுக் கொண்டார்.

நூல் வெளியீட்டுத் துறையில் அல்லயன்ஸ் குப்புசாமி ஐயர் இப்போதுள்ள பிரசுராலயங்களுக்கு முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இருந்திருக்கிறார். தற்கால இலக்கியத்தை முறையாகத் தொகுத்து, தமிழ் மக்களுக்கு அளிப்பது மிகப்பெரிய பணி என்பதை அவரே முதன் முதலாக உணர்ந்ததாகத் தோன்றுகிறது. 'தமிழ்நாட்டுச் சிறுகதைகள்' வரிசை அதிலிருந்து தான் பிறந்தது.

முதலில் வ. வே. சு. அய்யரின் 'குளத்தங்கரை அரசமரம்' முதலிய கதைகளை அவர் தொகுத்து வெளியிட்டார். அவருடைய முயற்சியைக் கண்டு ராஜாஜிக்கு அவர் மீது அன்பு பிறந்தது. தம்முடைய சிறு கதைகள், 'கண்ணன் காட்டிய வழி' என்ற நூல்களை அவருக்குக் கொடுத்து உதவினார். இதற்கு அவர் பணம் பெற்றுக் கொள்ளவில்லை. த. நா. குமாரசாமி தமது 'கன்னியாகுமரி' முதலிய கதைகளை அல்லயன்சில் பிரசுரத்திற்குக் கொடுத்தார்.

இந்தச் சமயத்தில் குப்புசாமி ஐயரை நான் சந்திக்க நேர்ந்தது. 'ராஜாஜியும், த.நா. குமாரசாமியும் சரியான சமயத்தில் எனக்குக்

கை கொடுத்து உதவினர்கள். அவர்களுக்கு நான் என்றைக்கும் கடமைப்பட்டவன். இவர்களை நான் எப்படி மறக்க முடியும்?' என்று கூறினர். த. நா. குமாரசாமிக்கு வங்காளி மொழி நன்ருகத் தெரியும். வங்க இலக்கியப் புரட்சிக்கு அடிகோலியவர் என்று ரவீந்திரநாத் தாகூரால் புகழப்பட்ட பங்கிம் சந்திர சட்டர்ஜியின் நாவல்களைத் தமிழில்மொழிபெயர்த்துக் கொடுத்தார் குமாரசாமி. அவற்றில் 'விஷ விருட்சம்' முக்கியமானது. இவற்றை தமிழ்நாட்டு மக்கள் ஆயிரக்கணக்கில் வாங்கிப் படித்துப் பயன் பெற்றனர். அல்லயன்ஸ் கம்பெனியின் அஸ்திவாரம் உறுதிப்பட்டது.

இதற்குப் பிறகு 'தமிழ்நாட்டுச் சிறுகதைகள்' வரிசை வேகமாகத் தொடர்ந்தது. அதிலும்குப்புசாமி ஐயரின் நேர்மைக்கு ஓர் உதாரணம் காணலாம். வ. வே. சு. அய்யர், ராஜாஜி, குமாரசாமி ஆகிய மூவருடைய சிறுகதைகளும் வெளியானவுடன் அவர் தி. ஜ. ர. விடம் சென்று 'உங்களுடைய கதைகளைத் தேடி எடுத்துக் கொடுங்கள்' என்ருர். தி. ஜ. ர.வுக்கு இன்னும் கொஞ்சம் பயம்தான்.

''கரையான்கள்?''

''இந்த வீட்டில் அவ்வளவு கரையான்கள் இல்லை. எடுத்துக் கொடுங்கள்.''

முதல் முதலில் தம்மிடம் கொடுக்கப்பட்ட கதைகள் அவை; எனவே பிரசுராலயம் சற்று முன்னுக்கு வந்தவுடன் அவருடைய கதைகளையே பிரசுரிக்க வேண்டும்; இந்த நியாய உணர்ச்சியே குப்புசாமி அய்யரை தி. ஜ. ர. விடம் அனுப்பியது; 'சந்தனக் காவடி முதலிய கதைகள்' என்ற கதைகள் முற்கூறிய வரிசையில் வெளியாயின. அதைத் தொடர்ந்து, கு. ப. ராஜகோபாலனின் 'கனகாம்பரம்' தி. நா. சுப்ரமணியனின் 'தோட்டியை மணந்த அரசகுமாரி', 'வஸந்தன்' எழுதிய 'வெண்தாமரை' முதலிய நூல்கள் தமிழ் வாசகர்களின் பேராதரவைப் பெற்றன. ஆயினும் நூலாசிரியர்களுக்குப் போதிய பணம்கொடுப்பதற்கும், அச்சுப்பிழை திருத்துவதற்கு இரண்டொருவரை அமர்த்திக் கொள்வதற்கும்கூட அவருக்கு வசதியில்லை. இதற்காகப் பல எழுத்தாளர்கள் குப்புசாமி ஐயரிடம் கோபம் கொண்டது எனக்குத் தெரியும். ஆனல் அவருடைய நிலைமையை நன்ருக உணர்ந்திருப்பவர்கள் கோபத்திற்குப் பதிலாக அவரிடம் அனுதாபமே காட்டினர். பலதடவைகளில் நானும் கு. ப. ரா.வும் திருவல்லிக்கேணியிலிருந்து சென்னை கடற்கரைச்சாலை வழியாகவே நடந்து மயிலாப்பூர் வந்திருக்கிறேம். தம்மிடம் கு. ப. ரா. பண உதவிக்காகவே வந்திருக்கிருர் என்று குப்புசாமி ஐயருக்குத் தெரியும். 'இதோ பாருங்கள், என்னிடம் இருபது ரூபாய்

லிங்கனும் நூலகமும்

அமெரிக்க அதிபர் லிங்கன் படிக்காத நூல், அவர் வாழ்ந்த தலைநகரைச் சுற்றி 50 மைல் தொலைவில் எந்த நூலகத்திலும் கிடையாது. அவர் அதிபராக இருந்தாலும், 50 மைல் தொலைவில் அவர் படிக்காத நூலில்லை.

—தமிழக முதல்வர் மு. க.

இருக்கிறது. நீங்கள் பத்து ரூபாய் எடுத்துக்கொள்ளுங்கள்' என்று கூறுவார். பத்து ரூபாயைப் பெற்றுக்கொண்டு மீண்டும் கு.ப ரா, அதே கடற்கரை வழியாக வீடுவந்து சேருவார். குப்புசாமி ஐயரிடம் ஒளிவுமறைவு எப்போதுமே இருந்ததில்லை. பணம் இருககும்போது தாமே எழுத்தாளரைத் தேடிவந்து பணம் கொடுத்ததும் எனக்குத்தெரியும்.

இதைப்போன்ற பொருள் நிலவரம் இருந்தபோது தமக்கென்று சொந்த அச்சகம் வாங்குவது என்ற யோசனைக்கு இடமே யில்லை. பல அச்சகங்களில் கொடுத்து நூல்களை அச்சிடுவார். அப்போது சென்னையில் 'டிராம்' வண்டிகள் இருந்தன. அவற்றில் உட்கார்ந்து 'ப்ரூப்' திருத்திக் கொண்டே ஐயர் பிரயாணம் செய்வார்.

அவரைப்பற்றிய ஒரு நிகழ்ச்சி மறக்கமுடியாதபடி என் நினைவில் இடம் பெற்றிருக்கிறது. அல்லயன்ஸ் கம்பெனியின் பல நோக்கங்களை எடுத்துக் காட்டுவதால் குறிப்பிடுகிறேன். 'புதுமைக்கவி பாரதியார்', 'ஜவாஹர் வாழ்க்கை வரலாறு' முதலிய நூல்களை ஏற்கனவே பிரசுரித்திருந்த குப்புசாமி ஐயருக்கு 'தீனபந்து சி. எப். ஆன்ட்ரூஸ் வாழ்க்கை வரலாறு' ஒன்றை வெளியிடவேண்டுமென்று தோன்றியது. ஆன்ட்ரூஸ் காலமான செய்தி அப்போது வெளியாகியிருந்ததாக என் நினைவு. அவரைப் பற்றி சிறு நூல் ஒன்றை எழுதித் தருமாறு அவர் தி.ஜ ர.வைக்கேட்டார். ஆன்ட்ரூஸ் இந்தியாவுக்குப் பணிபுரிய முன்வந்த வெளி நாட்டுப் பெரியார்களில் ஒருவர் என்பதும், அவர் இங்கு செய்த சேவைகளும் தி. ஜ. ர.வுக்குத் தெரியுமே தவிர, வாழ்க்கை வரலாறு எதுவும் விவரமாகத் தெரியாது. இதற்காக ஐயர் ஆன்ட்ரூஸ் பற்றிய வேறுசில நூல்களைக் கொண்டு வந்துகொடுத்து. அதை எழுதுவித்தார் அதை எழுதி முடித்த பிறகு, ''ஆன்ட்ரூஸ் மிகப்பெரிய மகான் என்பதில் ஐயமில்லை. காந்திஜியும், ரவீந்திரநாத் தாகூரும் அவரைப் பற்றிக் கூறியிருக்கும் புகழுரைகளே அதற்குப் போதுமானவை. ஆனால் மக்களுக்கு இவரைப்பற்றி அதிகமாகத் தெரியாது. அதனல் இப்புத்தகம் அதிகமாக விற்குமா என்பது சந்தேகமாக இருக்கிறது'' என்று கூறினர் ஆசிரியர்.

'இல்லை. இல்லை. மக்களுக்குத் தெரியாததை எடுத்துரைக்க வேண்டும் என்பதே அல்லவா, நூல் வெளியீட்டின் நோக்கம்? தெரிந்தவர்களைப்பற்றியே எழுதுவதில் என்ன பயன்?'

'புத்தகத்தை வாங்கிப் படித்த பிறகுதானே அவருடைய பெருமை தெரியும், அவர்கள் வாங்க வேண்டுமே என்றுதான் கூறுகிறேன்.'

'வாங்காது போனல் போகட்டும் சார். இந்தப் பெரிய மனிதன் வாழ்க்கை வரலாற்றைப் பிரசுரிததோம் என்ற ஒன்றே எனக்குப் போதும்.'

அந்த மாத முடிவுக்குள் ஆன்ட்ரூஸ் வரலாறு வெளியாயிற்று.

'இலக்கியத் தொழில் மக்களுடைய அறிவை வளர்க்க உதவ வேண்டும்' என்பது அல்லயன்ஸின் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று என்று ஆரம்பத்திலேயே கூறினேன் அல்லவா? இந்த நிகழ்ச்சி அதை மிக நன்ருக எடுத்துக் காட்டுகிறது. ஒரு ஆசிரியர்

நூல் எழுதுகிறுர் என்றுல், அதற்கு உதவக்கூடிய ஆதார நூல்களை எல்லாம் திரட்டிக் கொண்டுவந்து ஆசிரியருக்குக் கொடுத்து எழுதுவிப்பது குப்புசாமி ஐயருடைய வழக்கம்.

பலவழிகளில் குப்புசாமி ஐயர் நூல் வெளியீட்டுத் துறையில் முன்னேடியாக இருந்தாரென்பதற்கு அவர் வெளியிட்ட ''கதைக்கோவை''த் தொகுதிகள் நல்ல உதாரணம். ஆங்கிலத்திலும் பிற மேலை நாட்டு மொழிகளிலும் பல ஆசிரியர்களின் கட்டுரை, கதை, கவிதைகளைத் திரட்டி 'Anthologies' என்று கூறப்படும் நூற்திரட்டுகள் வெளியாகியிருக்கின்றன. தமிழில் மட்டும் அப்படிப்பட்ட நூல்கள் அந்தக்காலத்தில் வெளியான நினைவு எனக்கு இல்லை.

நல்ல சிறுகதை எழுத்தாளர்களில் 40 பேருடைய கதைகளை எடுத்துக் கதைக் கோவையாக முதன் முதலில் வெளியிட்டார். அதற்குத் தமிழ்நாட்டில் அமோக வரவேற்புக் கிடைத்தது. அதற்குப் பிறகு இரண்டாவது மூன்ருவது கதைக்கோவைத் தொகுதிகளையும் அவர் வெளியிட்டார். கிட்டத்தட்ட சிறுகதை எழுத்தாளரில் சிறந்தவரென்று கருதப்படும் எல்லோரும் இதில் இடம் பெற்றிருக்கின்றனர். தற்காலத் தமிழ் வளர்ச்சியில் சிறுகதையின் பங்கு என்னவென்று தெரிந்து கொள்ள விரும்பும் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களுக்கு இதை விடச் சிறந்த கருவூலம் இருக்க முடியாதென்பது என் கருத்து. எனது அருமை நண்பர் கி. வா. ஜகன்னுதன் இவற்றின் தயாரிப்பில் பேருதவியாக இருந்தார், ''கதைக் கோவை'' என்ற தலைப்புக்கூட அவர் கொடுத்தது தான் என்று நினைக்கிறேன்.

சோவியத் யூனியனது 46 மொழிகளில் சஞ்சிகைகள் வெளியிடப்படுகின்றன. அவற்றில சில அயல் மொழிகளில் பிரசுரமாகின்றன: உதாரணமாக ''சோவியத் யூனியன்'' பதினேழு அயல் மொழிகளிலும், ''சோவியத் வுமன்'' பத்து மொழிகளிலும், ''நியூ டைம்ஸ்'' ஏழிலும் வெளியாகின்றன.

இன்று 'அல்லயன்ஸ் கம்பெனி' நூல்வெளியிட்டாளர்களிடையில் நல்ல மதிப்புப் பெற்றிருப்பதற்குக் காரணம் அதன் உரிமையாளரின் உழைப்பே யாகும். அவர் தொடங்கிய வேலையை அவருடைய புதல்வர்கள் தொடர்ந்து நடத்தி வருகிறுர்கள். இரண்டாவது உலகப்போர் காலத்தில், இந்திய அரசியல்நிர்வாகம் வெளிநாட்டுப் போர்முனைகளிலிருந்த தமிழர்களுக்காக ஏராளமான தமிழ்நூல்களை வாங்கி அனுப்பிய காலத்தில்தான் குப்புசாமி ஐயரின் பணக்கஷ்டம் தீர்ந்தது. ஆனுல் இறுதிவரை புத்தகங்கள் வெளியிடுவதன் அடிப்படை நோக்கங்களை அவர் கைவிடவில்லை. ''பண்டித நடேச சாஸ்திரியின் ''திக்கற்ற இரு குழந்தைகள்'' வெளியிட்டது அல்லயன்ஸ் தான்'' என்று கூறி கடைசிவரை அவர் பெருமைப் பட்டுக் கொண்டது அவருடைய இலக்கிய ரசிகத் தன்மையை எடுத்துக்காட்டுகிறது. உழைப்பில் நம்பிக்கை கொண்டு உயர்ந்த குப்புசாமி ஐயர் என்ற தனி மனிதனின் வெற்றி 'அல்லயன்ஸ்' நிறுவனம்.

●

தி. ஜானகிராமன்

குண்டூசி கோபால்

ஆசிரியர் சந்திப்பிற்கு வெகு நாளாக அகப்படாமல் இருந்த தி. ஜானகிராமன் அகப்பட்டு விட்டார்; ரொம்ப மகிழ்ச்சி.

தி. ஜா. (அ. இ. ரேடியோவில் வேலைபார்ப்பவர்) டில்லியில் குடியேறிவிட்டபின் அவரை சென்னையில் காண்பது அரிதாயிருந்தது. சென்ற வாரம் சென்னைக்கு வந்திருக்கிறார் என்பது தெரிந்ததும், அவரை டெலிபோன்மூலம் இடம் இடமாக தேடிக் கொண்டிருந்தேன். அவர் ஓர் இடத்திலாவது தங்கியிருந்தால் தானே!

திடீரென்று டெலிபோன் மணி அடித்தது—தி. ஜா.வின் குரல்!

''நீங்கள் என்னைப் பார்க்க வேண்டும் என்றீர்களாம். அது முடியாது......''

''ஏன்? ஏன்! நிச்சயமாகப் பார்த்தே ஆகவேண்டும்.''

''அது உங்களால் முடியவே முடியாது!... நான் ஒரு இடத்தில்

தங்கினால்தானே!...பிற்பகல் சரியாக இரண்டரைமணிக்கு நானே அங்கு வந்துவிடுகிறேன்.''

மனுஷன் சொன்னபடி செய்துவிட்டார்; டணார் என்று இரண்டரைமணிக்கு ஆஜர்!

'குறித்த நேரத்திற்குள் பேட்டி முடியவேண்டுமே' என்ற கவலையால், மறுகணமே என் கேள்விகளைத் தொடுத்தேன்.

* * *

''நீங்கள் முதன்முதலில் எப்பொழுது எழுதத் தொடங்கினீர்கள்? எழுதவேண்டும் என்ற எண்ணம் எப்படித் தோன்றியது?''

''15வது வயதில் எனக்கு எழுத வேண்டுமென்ற துடிப்பு தோன்றியது. பின்னால் வேறு வேலைக்குப் போனால்கூட எழுதுவதை விடக்கூடாது என்ற தீர்மானமும் ஏற்பட்டது. ஆனால் இது எப்படி தோன்றியதோ...ஞாபகமில்லை''

''நீங்கள் முதலில் என்ன எழுதினீர்கள்?''

''ராமாயணக் கதையை—என் நோக்குப்படி— வேறு போக்கில் எழுதினேன். அது வெறும் சிறுபிள்ளைத்தனமான முயற்சி. நல்ல வேளை, வெளியிடப்படவில்லை! காலேஜில் படிக்கும்போது சிற்சில சிறு கதைகள் எழுதினேன். ஒன்றிரண்டு ஆனந்த விகடனில் வெளியான ஞாபகம். இதன் பிறகு நான் எழுதிய ''அமிர்தம்'' என்ற முதல்நாவல் ''கிராம ஊழியன்'' பத்திரிகையிலும் தொடர் கதையாக வெளிவந்து, பிறகு புத்தகமாக வெளியிடப்பட்டது. இது தமக்குப் பிடித்திருப்பதாக கு. ப. ராஜகோபாலன் சொன்னார். என்னைப் பொறுத்தவரையில் அதை எழுதியதற்காக வெட்கப்படுவதைத் தவிர வேறு ஏதும் சொல்வதற்கில்லை.''

''இந்த முதல் நாவலுக்கு என்ன பணம் கிடைத்தது?''

''ரூ. 160/– கொடுத்து எல்லா உரிமைகளையும் எடுத்துக் கொண்டார்கள். இரண்டு பதிப்புகள் வெளிவந்ததாகத் தெரிகிறது''

''நீங்கள் எழுதிய நூல்கள் இதுவரை எத்தனை வெளிவந்துள்ளன?''

''நாவல், சிறுகதைத்தொகுப்பு, குறு நாவல், நாடகம், கட்டுரைத் தொகுப்பு, பிரயாண நூல், விஞ்ஞான (மொழி பெயர்ப்பு) நூல் இப்படியாக சுமார் 25 நூல்கள் வெளிவந்துள்ளன.''

''நீங்கள் எவற்றை அதிகம் எழுத விரும்புகிறீர்கள்?''

''சிறு கதைகள், நாவல்கள்.''

''உங்கள் சிறுகதைகள், நாவல்கள் இவற்றுள் சிறந்தவை என்று நீங்கள் கருதுபவை எவை?''

இக்கேள்விக்கு அவர் ''நான் சொல்வதற்கில்லை'' என்றார்.

சோவியத் யூனியன் தொழிற் சங்கங்கள் ஏராளமான பிரசுரங்களை வெளியிடுகின்றன. அவைகள் 73 சமூக—அரசியல் மற்றும் வெகுஜன தொழில் ரீதியான பத்திரிகைகளை வெளியிடுகின்றன. எல்லாத் தொழிற் சங்கப் பத்திரிகைகளின் கூட்டு விநியோகம் 1968 இல் 15 இலட்சம் பிரதிகளாக இருந்தன.

''புத்தகங்கள் எழுதுவதன் மூலம் உங்களுக்குக் கிடைக்கும் வருமானம் திருப்தியளிக்கிறதா? உங்களுடைய எந்த நூலுக்கு அதிக ராயல்டி கிடைத்திருக்கிறது?''

''என்னைப் பொறுத்த மட்டில், புத்தக விற்பனைமூலம் கிடைக்கும் ராயல்டி அதிகமில்லை. இதைவிட பத்திரிகைகளில் நாவல்களைத் தொடராக வெளியிடுவதன்மூலம் தான் சுமாரான பணம் கிடைக்கிறது — உற்சாகமளிப்பதாகவும் இருக்கிறது. என் நூல்களில் 'அம்மா வந்தாள்', 'மோகமுள்', 'மலர் மஞ்சம்' ஆகிய நூல்களுக்கே அதிக ராயல்டி கிடைத்திருக்கிறது.''

''நீங்கள் தொடர் கதைகளே அதிகம் எழுத விரும்புகிறீர்களா? எனின், அதற்குக் காரணம் என்ன?''

''தொடர்கதை எழுதவேண்டுமென்ற ஆசையோ ஆற்றலோ எனக்குக் கிடையாது. வாசகர்கள் நிறையக் கிடைக்கிறார்கள்; பண வருமானமும் கிடைக்கிறது —அதனால் எழுதுகிறேன். ஆனால் தொடர்கதை எழுதுபவர்களுக்கு ஏற்படும் வழக்கமான நிர்ப்பந்தங்களுக்கு என்னை உட்படுத்திக் கொள்ளுவதில்லை......''

''அதாவது......''

''தொடராக எழுதும்போது— நாம் ஜாக்கிரதையாக இல்லாத வரையில்—சில இடைஞ்சல்கள், சில விவகாரங்கள், சில மூளிகள் ஏற்படலாம். நம்மையும் அறியாமலே சில விஷத்தீண்டல்கள் ஏற்படலாம். ஆகவே, இவைகளால் பாதிக்கப்படாமல் தடுப்பு ஏற்பாடுகள் செய்து கொண்டே எழுத முற்படவேண்டும்.''

''புதிய இலக்கிய சோதனைகளைப் புரிந்துகொண்டு ஆதரிக்கத் தக்க அளவுக்கு இன்றைய வாசகர்களின் ரஸனை தேர்ந்துள்ளதாகக் கருதுகிறீர்களா?''

''புதிய இலக்கிய சோதனைகளை பொறுத்துக்கொள்ளவோ, புரிந்து கொள்ளவோ, ஆதரிக்கவோ கூடிய நுட்பமான ரஸனை மரபு தமிழ்நாட்டில் பெரும் அளவில் வளர்ந்திருப்பதாக நான் கூற முடியாது. இத்தகைய தேர்ந்த ரஸனை சில நூறு பேருக்குள் அடங்கிவிடலாமோ என்னவோ. உருவத்திலும், விஷயத்திலும், பாணியிலும், துணிச்சலான புதிய சோதனை செய்பவர்கள் இன்றைய நிலையில் பல்லாயிரம், லட்சம் என்ற அளவில் வாசகர்களுக்கு ஏங்கினால் ஆசாபங்கம் தான் ஏற்படும். ஆனால் தேர்ந்த, நுட்ப ரஸனை உள்ள இந்த சிறுபான்மையினரிடம்தான் இலக்கிய ரஸனை மரபுக் கெல்லாம் லீடர்ஷிப் வழிவழியாக இருந்து வந்திருக்கிறது. அவர்கள் மூலம் தான் இலக்கிய ரஸனை பெரும்பான்மையினரிடம் வழிந்தோடிக் கொண்டிருக்கிறது. இந்த நியதியை யாராலும் மாற்ற முடியாது. சர்வாஞ்சகமான இலக்கியம் படைக்கும் கனவு, சர்வரோக நிவாரணி கண்டுபிடிக்கப் படும்போது சாத்தியமாகலாம்.''

''புத்தக விமர்சனங்களால் நீங்கள் பாதிக்கப்படுவதுண்டா? அல்லது வாசகர்கள் பாதிக்கப் படுகிறார்களா? பத்திரிகைகளில் நூல் விமர்சனம் இன்னும் அதிக அளவில் செய்யபடவேண்டுமா?''

''மதிப்புரைகளால் நான் பாதிக்கப்படுவதில்லை; எழுத ஆரம்பித்த புதிதில், சாதகமான மதிப்புரையால் சந்தோஷமும், பாதகமான மதிப்புரையால் சிறிது கோபமும்

ஏற்பட்டிருக்கலாம். இப்போது ஏதுமே இல்லை. தன் சொரூபத்தையும் தன் ஆத்மிக சாத்யங்களையும் காணவும், தேடவும் எழுத்து ஒரு கருவி என்று கருதும் நிலை வரும்போது மதிப்புரைகளுக்கெல்லாம் அர்த்தமில்லை.

மதிப்புரை எழுதுபவர்களின் யோக்கியதையைப் பொறுத்து வாசகர்கள் பாதிக்கப்படுகிறார்கள். தமிழ்ப் பத்திரிகை உலகில் புத்தக விமர்சனத்திற்கு உரிய போதிய இடம் இன்னும் தரப்படவில்லை. மதிப்புரைகள் புதிய இலக்கியப் படைப்புக்களுக்கு உரம் போடாவிட்டாலும், நல்ல ரஸனை மரபு பரவ உதவும். அதற்கு பத்திரிகைகள் தவிரவேறு பாய்கால்கள் தற்போது இல்லை.''

''இலக்கியப் படைப்பாளிகளுக்கு தற்போது சமுதாயத்தில் உரிய அளவு அந்தஸ்தோ, கௌரவமோ, வருமானமோ கிடைக்கிறதா ?''

''இல்லை. உரிய அந்தஸ்து இன்னும் கொடுக்கப்படவில்லை. கௌரவமும், வருமானமும்கூட கிடைப்பதில்லை.''

''இந்த நிலைமையை மாற்றுவதற்கு பத்திரிகைகளும், அரசாங்கமும், கல்வித்துறையினரும் ஏதேனும் செய்ய முடியுமா ?''

''பத்திரிகைகள் ரஸனை வளர்ச்சிக்கு ஏதேனும் செய்யலாம். ஆனால் அரசாங்கம் இலக்கிய வளர்ச்சியை செய்யவேமுடியாது. இலக்கியப் பரிச்சயத்தை பள்ளிக்கூட நிலையிலிருந்தே பரவலாக ஊட்ட முடியும். ஆனால், தமிழ் போன்ற தொன்மையான இலக்கிய மரபுகள் கொண்ட சில மொழிகளில் இது எந்தக்காரணத்தாலோ புதிய ரசனை மரபுதடைப்பட்டு விடுகிறது. பழமையையே பெரிதாகக் கருதித் தொற்றிக் கொண்டிருக்கும் நோய் எப்பொழுதுமே நம்மிடம் ஓங்கி நிற்கிறது. இந்தியாவில் வேறு மொழிப் பிராந்தியங்களில் கல்லூரி, பள்ளிக்கூடங்களில் புதிய இலக்கியப் படைப்புகள் பாடங்களாக இடம் பெற்று விட்டன. ஆனால், தமிழிலோ இந்தப் பழக்கம் இன்னும் வளரவில்லை. மிகத் தொன்மையான இலக்கியங்கள் கொண்ட தமிழ் போன்ற மொழிகளில் புதுமை இலக்கியப் படைப்பாளிகளுக்கு இந்த தர்மசங்கடங்கள் ஏற்படத் தான் செய்கின்றன.''

''சராசரித் தமிழன் இதற்கு ஏதேனும் செய்ய முடியுமா?''

''சராசரித் தமிழனுக்கு மட்டும் அல்ல—சராசரி இந்தியர்களுக்கே—இப்பொழுது லாட்டரிச் சீட்டு வாங்குவதே நல்ல பொழுது போக்காக இருந்து வருகிறது. ஒருவேளை அதன்மூலம் லட்ச ரூபாய் பரிசு கிடைக்கலாம். ஒரு

அமெரிக்காவில் எழுத்துச் சுதந்திரம்

அமெரிக்க நாட்டு எழுத்தாளர்களுக்கு இருக்கும் சுதந்திரம், வேறு எந்த நாட்டிலும் இருக்க முடியாது. இவர்கள் எந்த விஷயத்தைப்பற்றி வேண்டுமானாலும் எழுதுவார்கள். மக்கள் அதை ஏற்றுக் கொள்வார்கள். இதற்கு முக்கிய காரணம், அமெரிக்கர்களுக்கென்று பெரிய பாரம்பரியம் இல்லாததது தான். முந்நூறு வருஷ சரித்திரம் தானே அவர்களுக்குண்டு...!

— சோவியத் செய்தி

ரூபாய்க்குப் புத்தகம் வாங்கினால் அது கிடைக்காது. இவர்கள் இலக்கிய வளர்ச்சிக்கு என்ன செய்ய முடியும் என்று எனக்குச் சொல்லத் தெரியவில்லை.''

''உங்களுடைய நூல்கள் இதர இந்திய மொழிகளிலோ ஆங்கிலத்திலோ மொழி பெயர்க்கப் பட்டுள்ளனவா?''

''ஆம். பல இந்திய மொழிகளிலும், சில ஐரோப்பிய மொழிகளிலும் மொழி பெயர்க்கப் பட்டுள்ளன.''

''இதுபோல் மொழி பெயர்க்கப் படுவது அவசியமா? இதனால் ஏற்படும் சாதகம் என்ன?''

இந்தியாவில் இந்திய மொழிகளிடையே பரஸ்பர மொழி பெயர்ப்புக்கள் அடிப்படையான தேவை ஆகும். படித்த தமிழர்கள் பலர் காஃப்கா, ஜீட், சார்த், பெக்கெட், காமூ— போன்றவர்களின் எழுத்துக்களைக் கரைத்துக் குடித்திருக்கிறார்கள். ஆனால், நூறு இருநூறு மைல்களுக்குள் இருக்கும் தெலுங்கு, மலையாள, கன்னட மேதைகளைப் பற்றி ஒன்றுமே தெரியாது. இந்தத் தொடர்பை ஆக்குவதற்கும் வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் உதவி செய்யலாம். ஆனால், அது பணம் தருவது அல்லது அத்தகைய உதவி செய்வதோடு நிற்க வேண்டும்; தரம், தேர்வு இவற்றில் தலையிடாமல், அந்தப் பொறுப்புகளை நம்பகமான இலக்கிய ரஸிகர்களிடம் விட்டுவிடவேண்டும். மொழி பெயர்ப்புகளினால், கொடுக்கிற, வாங்குகிற இரு மொழிகளுக்குமே நன்மை.''

''உங்கள் நூல்கள் பற்றி வாசகர்களின் கருத்துக்களை அறிவதற்காக நீங்கள் நூலகர்களைச் சந்தித்துப் பேசுவது உண்டா ?

''இல்லை.''

''நம் நூலகங்கள் பற்றித் தங்கள் கருத்து என்ன? அவைகளைச் சிறப்பிக்க என்ன செய்யலாம்?''

''நூலகங்களில் மிக நல்ல நூல்களோடு மிகவும் தரக்குறைவான நூல்கள் இடம் பெற்றிருப்பதைக் கண்டேன். உண்மையான அறிவியல், இலக்கிய நூல்கள் மட்டுமே வைக்கப்படுவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். இதற்கு நல்ல நபர்களின் ஆலோசனையும், நல்ல தேர்வுக் கமிட்டிகளும் அவசியம். நூல் நிலையங்களுக்கு விற்றுப் பணம் பண்ணுவதையே தலையாய நோக்காகக் கொண்டு பல பிரசுரங்களும் அதற்கு ஒத்த எழுத்தர்களும் இப்போது முளைத்திருக்கிறார்கள். நல்ல ரசனை, அறிவு- இவற்றைப் பரப்பும் கடமையும் தமக்கு உண்டு என்று பிரசுரகர்த்தர்கள் நினைத்தால், குப்பைகளும் அவற்றை எழுதுபவர்களும் குவியாமலிருக்க வழி உண்டு.

''இலக்கிய வளர்ச்சிக்கு அரசாங்கத்தின் நேரிடை நிதி உதவியும் போஷணையும் அவசியமா? அல்லது நூலகங்கள் பெரும் அளவில் நூல்களை வாங்குவதற்கு நிதி அளிக்கும் மறைமுகமான உதவி மட்டும் போதுமா?''

''நேரிடை அரசாங்க ஆதரவு கூடாது. அரசியல், கட்சி நிர்ப்பந்தங்களின்றி, நிதி உதவும் மறைமுகமான ஆதரவு ஒன்றோடு மட்டும் அரசாங்கம் நின்றுவிட வேண்டும்.''

''நீங்கள் ஒரு நூலை எழுதத் தொடங்கும்போது ஒரு குறிப்பிட்ட வாசகர்களை மனதில் கொண்டு அதற்கேற்ப எழுதுவதுண்டா?''

"இலக்கிய சிருஷ்டிகளைப் பொறுத்தவரையில் நான் எந்த வாசகரையும் மனத்தில் கொண்டு எழுதத் தொடங்குவதில்லை."

"பிராபல்யமும் உயர்தர இலக்கிய சிருஷ்டியும் ஒன்றிணையக் கூடியவை அல்ல என்று நினைக்கிறீர்களா?"

"என்னவோ, உங்கள் கேள்வி நியாயமாகப் படவில்லை. என் நண்பர்கள் மூன்றுபேர் படிப்பதை மூன்று லட்சம் பேருக்கு சமமான பிராபல்யமாக நான் கருதினால் நீங்கள் என்ன செய்வீர்கள்?"

"சமூகத்திற்கு அடங்கி குறிப்பிட்ட சில கொள்கைகள் அல்லது லட்சியங்களை பிரசாரம் செய்யும் வகையில் ஆசிரியர்கள் எழுதக் கடமைப் பட்டிருக்கிறார்களா? அல்லது தற்போதைய கொள்கைகளுக்கு மாறாக அவர்கள் எதுவும் எழுதக்கூடாதா?"

"இது அந்தந்த ஆசிரியர்களை பொறுத்த விஷயம் ஆகும். என் கருத்து-சிருஷ்டி இலக்கியத்திற்கு அடிப்படை ஆதாரமே எழுத்து சுதந்திரம்தான் என்பது."

"இலக்கியப் படைப்புகளுக்கு கோட்பாடுகள் விதிப்பதை நீங்கள் ஆதரிப்பீர்களா?"

"மாட்டேன். எவ்விதக் கோட்பாடுகள் விதிப்பதும் விரும்பத்தக்கதல்ல."

"எழுதுவதற்கு சரியான சூழ்நிலை என்ன? நீங்கள் எந்த நேரத்தில் எழுதுவது வழக்கம்? ஒரே மூச்சில் எழுதுவீர்களா, அல்லது விட்டுவிட்டு எழுதுவீர்களா? தினமும், அல்லது ஒரு வாரத்தில், மாதத்தில் ஓர் அளவு எழுதி விடுவது என்ற ஒழுங்கு முறை உண்டா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை; தோன்றும்போது எழுதுவேன். எழுதுவதை நான் ஒரு வழக்கம் ஆக்கிக்கொள்ளவில்லை. எழுத வேண்டியதை மனத்தில் தெளிவாக உருவாக்கிக்கொண்டு, தீவிரமான உணர்வும் 'தியான'மும் (மூக்கைப் பிடித்துக் கொண்டு அல்ல) தரும் அழகில் லயித்து

புக் ஆஃப் தி மன்த் கிளப்

புக் ஆஃப்தி மன்த் கிளப் என்று ஒரு ஸ்தாபனம் அமெரிக்காவில் இயங்கி வருகிறது. அது ஆற்றும் பணி மகத்தானது.

அமெரிக்காவில் தினந்தோறும் பல புத்தகங்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. நல்ல புத்தகம் எது, எதை வாங்கிப் படிப்பது என்ற குழப்பம் ஜனங்களுக்கு ஏற்படலாம். அதைத் தவிர்க்க, 'இந்த மாதத்தில்சிறந்த புத்தகம் இது' என்று மக்களுக்கு சிபாரிசு செய்யவே 'புக் ஆஃப் தி மன்த் கிளப்' என்ற ஸ்தாபனம் தோன்றி, பிரமாதமாக வளர்ந்திருக்கிறது. இந்தக் கிளப் தேர்ந்தெடுக்கும் புத்தகம் என்றால், அதற்குப்பிரத்தியேக மார்க்கெட் கிடைத்து விடுகிறது. ஒரு மாதத்தின் சிறந்த புத்தகத்தை இருபது லட்சம் பிரதிகள் தன் அங்கத்தினர்களின் தேவைகளுக்கு மட்டுமே, அச்சிட்டு விநியோகிக்கிறார்கள். ஆசிரியருக்கும் நிறைய சன்மானம் கிடைக்கிறது.

ரேடியோ லைசென்ஸ்

அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான ரேடியோ, டெலிவிஷன் நிலையங்கள் இருக்கின்றன. அந்த நாட்டில் ரேடியோவுக்கு 'லைசென்ஸ்' கிடையாது. எல்லாமே தனியார் துறையைச் சார்ந்தவை. சர்க்கார் துறையில் இயங்கும் ரேடியோ வி. ஓ. ஏ. ஆனால் அது அமெரிக்க நாட்டிற்குள் ஒலிபரப்பாவதில்லை. வெளி நாட்டிற்கென்றே ஏற்பட்ட ஒலி பரப்பு நிலையம் அது. தேர்தல் காலங்களில் ரேடியோவும் டெலிவிஷனும் ஆற்றும் பணி மகத்தானது. பொது ஜன செய்தித் தொடர்பை (Mass Communications) அமெரிக்க மக்கள் பயன்படுத்திக் கொண்டிருக்கிற அளவுக்கு, உலகில் வேறெந்த நாட்டு மக்களும் பயன்படுத்திக் கொள்வதில்லை.

பூர்ண கர்ப்பத்தோடு எழுத முற்பட்டால் புறச் சூழ்நிலை பற்றிய கவலைக்கு இடமிராது.''

''நீங்கள் ஒருமுறை எழுதியதை மீண்டும் படித்துத் திருத்தங்கள் செய்வதுண்டா? இதுபோல் திருத்தினால் அது மேலும் சிறப்படையக்கூடும் அல்லவா?''

''ஒருவேளை சிறப்படையலாம். ஆனால், நான் அதுபோல் செய்யும் வழக்கம் இல்லை. காரணம், இயலாமை; அதனால் வரும் அலுப்பு.''

''தமிழில் இலக்கிய வெளியீடுகள் மிகக் குறைவாக உள்ளனவா? அல்லது மிக அதிகமாக உள்ளனவா?''

''போதிய அளவில் உள்ளன.''

''எத்தகைய சிருஷ்டிகள் மிகக் குறைவாக உள்ளன?"

''நாடகம், கட்டுரை, உண்மையான கவிதை—மூன்றும்.''

''உங்களுடைய அல்லது மற்றவர்களுடைய அனுபவங்களை வைத்து நீங்கள் கதை எழுதியிருக்கிறீர்களா? உண்மையான நபர்களை நீங்கள் கதாபாத்திரமாக்கிக் கொள்வது உண்டா?''

''உண்டு. என் கதைகள் பெரும்பாலும் அனுபவங்களை ஆதாரமாகக்கொண்டவையே.''

''அம்மா வந்தாள் கதையில் வரும் சம்பவங்கள் நம்பத்தக்கவை அல்ல, நடக்கக் கூடியவையும் அல்ல' என்ற குறை கூறலுக்குத் தங்கள் பதில் என்ன?''

''அவற்றிற்கும் அசல் வாழ்க்கைக்கும் பொருத்தம் இருந்தே ஆகவேண்டுமா, என்ன?''

''நாவல்கள் இயல்பை ஒட்டித்தான் இருக்கவேண்டுமா? நாவலாசிரியர் தமக்கென்று ஒரு தனி உலகை கற்பனை மூலம் சிருட்டித்துக் கொள்ளலாம் அல்லவா?''

''இயல்பாக இருக்கத்தான் வேண்டும் என்ற அவசியமில்லை. புதிய சாத்தியக் கூறுகளுக்கு முடக்கம் ஏற்படக்கூடாது. நாவலாசிரியர்களுக்கு மட்டும் அல்ல, இலக்கியப் படைப்பாளிகள் அனைவருக்குமே, கலை உலகம் ஒரு மாய உலகம். அது வாழ்க்கையைப்போல இருக்கும். ஆனால் அது வாழ்க்கையல்ல. வாழ்க்கையின் பரிமாணங்கள், வர்ணங்கள்—எல்லாம் அதில் இருக்கும். ஆனாலும் அது வாழ்க்கை அல்ல. இதை நான் எப்படி விண்டு சொல்லுவேன்?''

ஜானகிராமனும், நானும் ஏக காலத்தில் கடிகாரத்தை நோக்கினோம். நான் நல்லவேளையாக கேட்க வேண்டியவற்றையெல்லாம் குறித்த நேரத்திற்குள் கேட்டுக்கொண்டு விட்டேன். ●

விசுவநாத சத்தியநாராயணு

மணவை முஸ்தபா

தெலுங்கு இலக்கிய வானில் ஒளிமிக்கப் பெருஞ் சுடராகத் திகழும் விசுவநாத சத்திய நாராயணு புதினம், சிறுகதை, நாடகம், கவிதை, கட்டுரை, ஆராய்ச்சி, திறனய்வு ஆகிய இலக்கிய வடிவங்கள் எத்தனையுண்டோ அத்தனையிலும் தமது தனி முத்திரையைப் பதித்துள்ள இலக்கிய மேரு ஆவார்.

தம்மிடம் இயல்பாகப் படிந்துள்ள இலக்கியப் பேராற்றலில் பெரும் நம்பிக்கை கொண்ட விசுவநாதா நல்ல நெடிய தோற்மும் அறிவார்ந்த கூரிய பார்வையும் பார்ப்போரை எளிதில் கவர்ந்திழுக்கும் கம்பீரமும் கொண்டவர். தம் படைப்பாற்றல் திறனல் ஆந்திர மக்களின் உள்ளத்தில் மிக உயர்ந்த இடத்தைப் பெறும் பேறு பெற்றவர்.

1895 ஆம் ஆண்டு கிருஷ்ணு மாவட்டத்தில் உள்ள நந்தமேரு எனும் ஊரில் வைதீக அந்தணர் குலத்தில் பிறந்த விசுவநாதா சென்னைப் பல்கலைக் கழகத்தில் பயின்று தெலுங்கிலும் சமஸ்கிருதத்திலும் எம். ஏ. பட்டம் பெற்றவர். இளமையிலேயே இலக்கிய உலகில் அடியெடுத்து வைத்து எழுத்தாளராகி விட்ட விசுவநாதா இன்று எந்தத் தெலுங்கு எழுத்தாளரையும் விட மிக அதிகமான இலக்கியப் படைப்புகளையும் அதன் மூலம் பெரும் புகழையும் பொருளையும் திரட்டியுள்ள இலக்கியச் செல்வராவார்.

இடது சாரிப் போக்குக் கெதிரிடையான சம்பிரதாயப்போக்கில் உருவாகும் இவரது இலக்கியப் படைப்புக்கள் வழிவழி இலக்கிய வடிவும், கற்பனை வளமும், சிந்தனைத்தெளிவும், பழங்காலத்திய உயர்ந்த இலக்கிய நடையும் கொண்டு திகழ்கின்றன.

பல்வேறு இலக்கியப் பிரிவுகளிலும் தனக்கென ஒரு தனித்

துவம் கொண்டு திகழும் இவர் இன்றைய தெலுங்கு புதின இலக்கியத் துறையில் குறிப்பிடத் தக்கத் தனிச்சிறப்புடைய படைப்பாளராக விளங்குகிறார்.

இதுவரை சுமார் முப்பது புதினங்களுக்கு மேல் எழுதியுள்ளார். மறைந்து வரும் சமுதாயத்தை வருங்காலசந்ததிகளுக்குத் திறம்பட விண்டுரைக்கும் போக்கை இவரது புதினங்களில் பரக்கக் காணலாம். சமூகத்தின் பல்வேறு படிகளில் வாழும் மக்களின் வாழ்க்கைப் போக்கு, சிந்தனை, பழக்க வழக்கங்கள், உணர்ச்சிகள் ஆகியவற்றைத் திறம் படக் கதைவழி விளக்கிச் செல்லுவது இவருக்குள்ள தனிச் சிறப்பாகும். இவ்வகையில் அமைந்துள்ள புதினங்களில் தலையாயதாகக் கருதப்படுவது 'வேயி படகலு' (ஆயிரம் நாகப் படங்கள்) என்ற புதினமாகும். ஆந்திர நாட்டில் இரண்டு, மூன்று தலைமுறைகளாக சமுதாயத் துறையிலும் பண்பாட்டுத் துறையிலும் ஏற்பட்ட மாறுதல்களை அழகுறச் சித்தரிக்கும் சிறப்பு மிகு புதினமாகும் இது. 'செலியலிகட்ட' (சகோதரி ஆணை), 'தர்ம சக்ரமு' (தர்ம சக்கரம்) மதுரையைப் பின்புலமாகக் கொண்டு படைக்கப்பட்ட 'ஏக வீர', 'பத்தன்ன சேனானி' (சேனாதிபதி பத்தன்ன) 'மா பாபு' (என் பாபு) முதலிய புதினங்களில் பலவும் பல பதிப்புக்களாக வெளி வந்துள்ளன.

இவரது புதினங்களில் காணும் மற்றொரு குறிப்பிடத்தக்க அம்சம் இவருக்குள்ள பழமைப் பற்றாகும். எந்த அடிப்படையில் கதையை அமைத்தாலும் அதில் நம் நாட்டின் பழம்பெருந் நாகரிகத்தின் உயர்வையும் மேலை நாட்டு வாழ்க்கை முறையைப் பின்பற்ற முயல்வோரைக் கண்டித்து, இந்து தர்மத்தின் உயர்வை நிலைநாட்ட முயலும் போக்கையும் காணலாம்.

மேற்கத்திய வாழ்க்கை முறையை மட்டுமல்ல, இலக்கியப் போக்கையும் கூட இவர் அப்படியே பின்பற்றவிரும்புவதில்லை. இதனால் இவரது கதை இலக்கியங்கள் மேனாட்டு கதை இலக்கிய அமைப்பு முறைகளினின்றும் சற்று வேறு பட்டே உள்ளன.

எனவே, இவரது புதினங்களும் சிறுகதைகளும் இவருக்கேயுரிய தனித்துவப் போக்குடையனவாக விளங்குவதில் வியப்பேதும் இல்லை. இவர் நூற்றுக்கணக்கான சிறு கதைகளை எழுதியுள்ளார். இவரது சிறுகதை இடம் பெறாத 'சிறுகதைத் தொகுப்பு' நூல்களே இல்லை யெனலாம்.

கவிதை இலக்கியத் துறையில் பழம் பெரும் கவி மன்னர்களாகத் திகழும் நன்னய்ய, திக்கன்ன போன்றோர்க்கு இணையாக இக் காலத் தெலுங்குக் கவிதையுலகம் போற்றும் விசுவநாதா ஆந்திர மக்களால் 'கவி சாம்ராட்' என்ற சிறப்புப் பெயரால் அழைத்துப் போற்றப்படுகின்றார். இவர் தமது கவிதைப் படைப்புக்களில் பழங் கால இலக்கிய நடையையும் உத்தியையும் கையாண்ட போதிலும், இக்காலத் தெலுங்கு மக்களின் பேச்சு மொழி மரபையும் திறம்படக் கையாண்டு கவிதை புனைகிறார்.

கற்பனை வளமிக்கக் கவிதைகளும், ஆழ்ந்த சிந்தனைகளைத் தாங்கி வெளிவரும் செய்யுட்களும், பாவமிக்க இசைப்பாடல்களும் எளிய நடையில் உணர்ச்

சிச் சித்திரங்களாக அமைந்து படிப்போரைக் களிப்பிக்கின்றன.

'கின்னர சானி பாடலு' (கின்னர மாதின் பாடல்கள்) போன்ற கவிதைப் படைப்புக்கள் சந்த அழகுடன் கூடிய இசைப் பாடல்களாக அமைந்துள்ளன. 'கோகிலம்மா பெண்ட்லி' (குயிலம்மையின் திருமணம்) போன்ற கவிதைப் படைப்புக்கள் மூலம் இயற்கையினூடே காணும் பேரன்புத் திறத்தையும் காதல் உணர்வுகளையும் திறம்பட வெளிப்படுத்தியுள்ளார். படிப்போரை எளிதில் தன் வயப்படுத்திக் கொள்ளும் இவரது கீத சந்த அமைப்புக்கொண்ட கவிதைகள் புலவர்களை மட்டுமின்றிப் பாமர மக்களையும் கவர்ந்ததில் வியப்பில்லைதான். ஆயர்குலச் செல்வனுன கண்ணபிரான் கோபியர்களோடு கொண்டிருந்த லீலா விநோதங்களை அடித்தளமாகக் கொண்டு பின்னப்பட்ட 'சிருங்கார வீதி' (சிருங்காரப் பாடல்கள்) அழகுணர்வூட்டும் கவிதை மட்டுமின்றி பக்தியுணர்ச்சியையும் ஊட்டவல்ல கவிதைப் படைப்பாகும். 'சசி தூதம்' (சந்திரன் தூது) என்ற தூதுக் கவிதையும் ''தெலுகு ரிதுவுலு'' (தெலுங்கு நாட்டுப் பருவங்கள்) என்ற கவிதை நூலும் இவரது சிறந்த படைப்புக்களாகும்.

ஆரம்ப காலத்தில் இவரை புகழேணியின் உச்சிக்கு இட்டுச் சென்ற அமரத்துவக் கவிதைப் படைப்புக்கள் 'ஆந்திர ப்ரசஸ்தி' (ஆந்திராவின் புகழ்) 'ஆந்திர பௌரஷமு' (ஆந்திராவின் வீரம்) என்ற கவிதைத் தொகுப்பு நூல்களாகும். ஆந்திரநாட்டின் பெருமையையும், ஆந்திர வீரர்களின் புகழையும் பற்றிய கவிதைகளாகும் இவை.

அமெரிக்காவில் புத்தகங்களை டெஸ்பாட்ச்செய்யும்இலாகாவை 'ஷிப்பிங் டிபார்ட்மெண்ட்' என்கிறுர்கள்.

— சோவியத் செய்தி

கவிதையுலகில் காலத்தால் அழிக்க முடியாத அமரத்துவப் படைப்பாக இவர் உருவாக்கியுள்ள 'ராமாயண கல்ப வ்ருக்ஷமு' (ராமாயண கற்பக மரம்) என்ற படைப்பு ராமாயணக் கதையைப் பின்னணியாகக் கொண்டு இயற்றப் பட்ட காவியமாகும்.

இவர் கவிதைத் துறையிலும் புதினத் துறையிலும் ஆற்றிய அளவு நாடக இலக்கிய வளர்ச்சிக்கு உழைக்கவில்லை யெனினும் 'நர்த்தன சாலா' (நாட்டிய அரங்கு) 'வேன ராஜு' போன்ற நாடகங்கள் இவரது நாடக ஆற்றலுக்குச் சான்ருகும்.

இன்றைய தெலுங்குஇலக்கியத் திறனய்வாளர்களில் முன்னேடி எனக் கருதப்படும் விசுவநாதா, நன்னய்ய, காளிதாசா, கிருஷ்ண தேவராயா போன்ற பெருங் கவிஞர்களின் கவிதைப் படைப்புக்களைத் திறம்பட ஆராய்ந்து கட்டுரைகளாக வெளியிட்டுள்ளார். இவ்வாராய்ச்சிக்கட்டுரைகள் இலக்கிய அறிஞர்களால் பெரிதும் போற்றப்படுகின்றன.

பல்வேறு இலக்கியத் துறைகளில் தனக்கெனத் தனியிடம் கண்டுள்ள விசுவநாதா இதுவரை நூற்றுக்கு மேற்பட்ட படைப்புகளை உருவாக்கியுள்ளார். இவரது படைப்புக்களில் பல இந்திய

மொழிகளில், குறிப்பாகத் தமிழ், கன்னட, இந்தி, வங்கமொழிகளில் பெயர்க்கப்பட்டுள்ளன. இவரது 'வேயி படகலு' (ஆயிரம் நாகப் படங்கள்) என்ற புதினம்டாக்டர் சி. ஆர். சர்மாவினுல் சிறப்பாக மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

இத்தனைசிறப்புக்களுக்கு உரியவராக இருந்தும் இவரிடம் சில குறைகளும் இருக்கவே செய்கின்றன. இவரது இலக்கியப் படைப்புகளில் அளவுக்கதிகமாக சமஸ்கிருதச் சொற்றொடர்கள் இடம் பெறுவதால் பாமர மக்கள் அதனை முழுதுமாக சுவைக்க இயலுவதில்லை. மேலும் மாறி வரும் கால ஓட்டத்திற்கெதிராக பழம்பெருமை பேசுவதிலும், புதுமையைப் போற்ற மறுக்கும் பண்பினுலும் சமூகப் பிரச்னைகளை அலசி ஆராய முற்படாததாலும் இவர் பிற்போக்காளராகவே இளம் தலைமுறையினரால் கருதப் படுகின்றுர். எனினும் இவருக்குள்ள இலக்கியப் பேராற்றலை எல்லோரும் ஒருமுகமாக ஒப்புக் கொண்டு போற்றுகின்றனர்.

விஜயவாடாக் கல்லூரியில் தெலுங்கு மொழிப் பேராசிரியராகவும், கரீம் நகர் அரசினர் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி ஓய்வு பெற்ற விசுவநாதா இன்று தம் முழு நேரத்தையும் இலக்கியத் தொண்டிற்கே ஒதுக்கிக் கொண்டுள்ளார்.

●

வரி விளம்பரங்கள்

இப் பகுதியில் வெளியாகும் வரி விளம்பரங்களுக்கு வரி ஒன்றுக்கு ரூ 0.50 வீதம் வசூலிக்கப்படும். குறைந்த கட்டணம் ரூ. 3-00

விபரங்கட்கு
நிர்வாகி ''நூலகம்''
14, தனிகாசலம் செட்டி ரோடு
சென்னை-17

வசதியாகத் தங்குவதற்கு லாட்ஜ்.

நாகர் கோயில் வரும் பிரயாணிகள் தங்குவதற்கு வசதியான இடம் ''கைலாஸ் லாட்ஜ்'' பஸ் நிலையம் சமீபம், மீனுட்சிபுரம், நாகர் கோயில்-1

Kailas Lodge
Meenakshipuram
Nagercoil – 1
Phone. 239

கல்லூரி, பள்ளி புத்தகங்கள்

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி நூலகங்களுக்குத் தேவையான ஆங்கிலம், தமிழ்ப் புத்தகங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

Xcel - Choix
Book Sellers & Publishers
114, Poonamallee High Road
Madras - 29.

அண்ணா ஒரு நூல் நிலையம்

தமிழக முதல்வர்
கலைஞர் மு. கருணாநிதி

'வீட்டுக்கு ஒரு நூல் நிலையம் வேண்டும்' என்றார் அண்ணா. புத்தகங்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தால் மட்டும் போதாது.

எண்ணிக்கை மிகுந்திருப்பதை விட எண்ணத்தை வளர்த்திடும் நூல்கள் வளர்ந்திட வேண்டும்.

அண்ணா பெயரில் காஞ்சியில் இலக்கிய நூலகம் ஒன்றை அமைக்கமுயற்சிகள் நடைபெற்று வருகிறது. அதற்கு அரசின் துணை தேவைப்படுகிறது. இம் முயற்சிகளில் தொடர்புடைய அதிகாரிகள் ஈடுபட்டால் அரசும் ஒத்துழைப்புத் தரும்.

அண்ணாஇரண்டுஆண்டுகளுக்கு முன்புதான் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அதற்கு முன்பு எதிர்க்கட்சியில் இருந்த நேரத்தில் அண்ணா படித்துக் கொண்டே இருப்பார்! அண்ணா இலக்கிய ஆசான், எழுத்து வேந்தன். நூல்கள் அவரைத் தேடி வருவதுண்டு. நூலகத்தைத் தேடி அவர் செல்வதும் உண்டு. அண்ணா ஒரு நூல் நிலையமாக வாழ்ந்தார். அந்த நூலகத்தில் 1330 குறட்பாக்கள், அகம், புறம் கலிங்கத்துப் பரணி போன்ற இலக்கியப் பனுவல்கள் உண்டு.

அண்ணா என்ற அப்பேர்ப்பட்ட நூலகத்தைப் பெரிய அளவில் திறக்க முடியாது என்பதால், சிறிய அளவில் படமாகத் திறந்து வைக்கிறேன்.

அண்ணா வாழ்க்கையில் நடந்த உருக்கமான நிகழ்ச்சி ஒன்று நினைவுக்கு வருகிறது. ராஜ்ய சபைக்கு அவர் தேர்ந்தெடுக்கப் பட்டபோது, டெல்லிக்குச் சென்ற அண்ணா, நாடாளுமன்ற நூல் நிலையத்தில் புத்தகம் படித் துக் கொண்டிருந்தார். இரவு மணி ஏழு ஆகியது. விளக்குகள் ஏற்றப்பட்டன. கூட வந்த உறுப்பினர்கள் எல்லாம் வீட்டுக் குச் சென்று விட்டனர். ஆனால் அண்ணா படித்துக்கொண்டே இருந்தார். கதவைப் பூட்ட வேண்டுமென்று நூலகப் பணியாள் வந்து சொன்னபிறகுதான் அண்ணா தன்னை உணர்ந்தார்.

அந்த அளவுக்கு தன்னை மறந்து படித்தவர் அந்த நூலகத்தில் அண்ணா ஒருவர்தான் என்பதை அவர் நிரூபித்தார்.

அண்ணா படிக்காத நூல் ஏதாவது உண்டா என்றால் அது அவர் மறைந்த பிறகு வெளியிட்டிருக்க வேண்டும். அண்ணா உயிரோடு இல்லா விட்டாலும், அவரது புகழ் என்றும் நிலைத்து நிற்கும்! அண்ணா வாழ்க!

(செங்கற்பட்டு மாவட்ட மத்திய நூலகத்தில் அறிஞர் அண்ணா திரு உருவப்படத்தைத் திறந்து வைத்து கலைஞர் நிகழ்த்திய சொற்பொழிவு.)

புத்தகப் புழுக் குஞ்சு

எம். எஸ். கல்யாணசுந்தரம்

பேராசிரியர் சரஸ்வதி தாஸ் சொன்னர்:—

ஒரு பாலகன் எழுத்துக்கள் கற்று, கோர்வையாகப் படிக்க ஆரம்பித்ததும் அவன் கண் முன் ஒரு புது உலகம் உதயமாகிறது—எழுத்து சாம்ராஜ்ஜியம். கட்டுரை அல்லது கதையைக் கொண்ட ஒவ்வொரு பாடமும் முடிவற்ற ஒரு பிரதேசம், ரகஸ்ய மயமானது. கட்டெறும்புகள் போன்ற அந்தக் கறுப்புக் கோடுகளிலிருந்து பொருள்கள், மனிதர்கள், பூதங்கள், தெய்வங்கள், செயல்கள், உணர்ச்சிகள், நவரச பாவ அனுபவங்கள், கற்பனைக்கான, கனவுகளுக்கான, கவிதைக்கான வித்துக்கள் உருவாகின்றன.

படிக்கும் சக்தி பெற்றவன் தனியான ஓரிடத்தில் அமர்ந்து, ஒரு புத்தகத்தின்மேல் குவிந்து, சுற்றுப்புற உலகை மறக்கிருன்—ஆனல் உலகெலாம் சுற்றுகிருன்: இமயமலை உச்சியில் இந்திய மூவர்ணக் கொடியுடன் நிற்கிருன்; மன்னர் கடலில் மூழ்கி முத்தெடுக்கிருன்; குருக்ஷேத்திரப் போரைப் பார்க்கிருன்: அமெரிக்க செவ்விந்தியரின் சுயமரியாதையையும், துணிச்சலையும், திறமையையும் கண்டு புளகாங்கிதமடைகிருன்; யூக்லிட் இடம் கணிதமும், காளிதாசரிடம் நாடக ரசனையும், சங்கரரிடம் வேதாந்தமும் கற்கிருன். கடலைக் கடக்கக் கப்பல் வேண்டாம், மலைகளைத் தாண்ட ஹனுமந்த சக்தி வேண்டாம், உபநிஷத் ஆசாரியர்களுடன் அளவளாவ கால குளிகை வேண்டாம். அந்தக் கட்டெறும்புகளும், நம் மூளைப்பயிற்சியும் ஆவன செய்யும்.

நான் சிறுவனுயிருந்தபோது கண்முன் வந்ததெல்லாம் படிப்பேன், படித்துக்கொண்டே இருப்பேன்: அறிக்கை, சுவரொட்டி விளம்பரப்பலகை...ஒரு அச்சுத் தாளும் என்னைவிட்டுத் தப்பி

விட முடியாது; ரெயில்வே கால அட்டவணை, பாட்டியின் மீனுக்ஷி கல்யாணக் கும்மி, புளி சுற்றி வந்த காகிதம், அப்பா சிடுசிடுப்புடன் படிக்கும் வருமான வரி எச்சரிக்கை...ஒவ்வொரு சமயம் அம்மா அலுப்புடன், ''உனக்கு அதெல்லாம் புரியாது, தொடாதே''' என்று கத்துவாள். இப்பொழுது தெரிந்த விஷயம் அப்பொழுது தெரிந்திருந்தால்! ''சுவாசித்தல் என்பதன் முழுக்கருத்து புரியவில்லை; அதற்காக மூச்சு விடாமல் இருக்கிறேனு? ஜீர்ணசக்தியின் நுட்பங்கள் புரியவில்லை; சாப்பிடாமல் இருக்கிறேனு? பூர்ணமாய்ப் புரிந்தது மட்டும்தான் படிப்பதானுல், படிப்பதற்குச் சரக்கு குறைவாகத்தான் இருக்கும். என் அபிவிருத்தியும் குறைவாகத்தான் இருக்கும்,'' என்று சொல்லியிருப்பேன். ''அம்மா, அப்பா, நீங்கள் படிக்கிறதெல்லாம் உங்களுக்குப் புரிகிறதா?'' என்று மாத்திரம் கேட்டிருக்க மாட்டேன். அந்த சந்தேகம் அப்பொழுது எழவில்லை. ஆனுல் அது நியாயமான கேள்வி என்பது பற்றி இப்பொழுது சந்தேகமே இல்லை. பெரியவர்கள்கூட புரிந்ததைத்தான் படிப்பது என்றிருந்தால், புஸ்தகப் பிரசுரம் இன்றிலும் குறைய வேண்டியதுதான்! இது தெரிய வேண்டிய விஷயந்தானு, அல்லது வீண் அக்கப்போரா, என்று சோதித்து, ஒரு தடுப்புச் சட்டம் நிறைவேற்றினுல் புத்தக உற்பத்தி இன்னமும் குறையும். முக்கால்வாசிப்பேர் படிக்கும் முக்கால்வாசி நூல்கள் காலத்தைப் பயன்படுத்த அல்ல, காலத்தைக் கொல்ல. காலத்தைக் கொல்ல நாம் ஏன் சிரமப்படவேண்டும், கொலையாளி என்ற பட்டம் பெறவேண்டும்? நாம் சும்மா இருந்தால், எதிர்காலம் என்ற என்றும் குறையா

குறைந்த விலையில்
நீடித்த உபயோகம்
மெர்குரி
பென்ஸில்
இந்தியா பூராவிலும்
எல்லா பிரதான
ஸ்டேஷனரி
விற்பனையாளர்களிடம்
கிடைக்கும்
தயாரிப்பாளர்கள் :
தி மதராஸ் பென்ஸில் பாக்டரி
சென்னை-1.

மகா சமுத்திரம், நிகழ்காலம் என்ற சிறு ஊசிக்காது வழியாகப் பாய்ந்து, இறந்தகாலம் என்ற வளரும் சமுத்திரத்தில் கலக்கிறது. தானுக இறப்பதை நாம் ஏன் கொல்லவேண்டும். நிற்க,

காலத்தை வென்ற நூல்கள் தீத் தணல்களாய் இன்றும் இருக்கின்றன; காலத்தைக் கொல்லும் நூல்கள் சாம்பல் குன்றுகளாக அவற்றைப் போர்த்துகின்றன; போலி நாணயம் நல்ல நாணயங்களை இல்லாமல் விரட்டியடிப்பது போல் ஆகிவிடுமா?

★

செய்திகள்

கன்னிமாராப் பொது நூலகம்

1969 டிசம்பர் மாதத்தில் கன்னிமாராப் பொது நூலகத்தில் 33 புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டதன் மூலம் மொத்த உறுப்பினர் தொகை 7511க்குஉயர்ந்துள்ளது. 16,199 வாசகர்கள் 46,671 நூற்களைப் பயன்படுத்தியுள்ளனர். 10,074 நூற்கள் வீடுகளுக்கு எடுத்துச் சென்று படிக்க அனுமதிக்கப் பட்டன.

அருப்புக்கோட்டை

(இராமனாதபுரம்)

அருப்புக்கோட்டை கிளை நூலகத்தில், வாசகர் அரங்கின் சார்பில் 15-1-1970ல் வள்ளுவர் விழா நடைபெற்றது. திரு. வி. செல்வராஜ் தலைமை வகித்தார். கவிஞர் இராமசாமி, திரு. சங்கரலிங்கம், புலவர் இரத்தின சபாபதி, திரு. பி. பி. என். நல்ல தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றினர். திரு, ஜவாஹர் நன்றி கூறினார்.

முத்துப்பேட்டை

(தஞ்சை)

முத்துப்பேட்டை கிளை நூலக உறுப்பினர்களால் கிளை நூலகத்தில் 28-11-1969ல் ''வாசகர் மன்றம்'' துவக்கப்பட்டது. மன்றத்தின் தலைவராக திரு. ஆர். தனசேகரனும், துணைத் தலைவராக திரு. முகமது ராவுத்தரும், செயலாளராக திரு. ஏ. செயராமனும், துணைச்செயலாளராக திரு. எம். அப்துல்காதரும், பொருளாளராக திரு. எம். இராசகோபாலும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சிவகாசி

(இராமனாதபுரம்)

சிவகாசி கிளை நூலகத்தின் 14வது ஆண்டு விழா வாசகர் வட்டத்தின் சார்பில் உயர்நிலைப் பள்ளி கலையரங்கில் 14-12-69ல் மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவர் திரு. RM. M. இராமனாதன் தலைமையில் அதிவிமரிசையாக நடைபெற்றது. வாசகர் வட்டத் தலைவர் திரு. ராஜகுரு அனைவரையும் வரவேற்றார். துணை நூலகர் திரு. டி. பாலசுப்ரமணியன் அறிக்கை வாசித்தார். விருதுநகர் நகர சபைத் தலைவர் திரு. S. பாலசுப்ரமணியம் மகாத்மா காந்தி உருவப்படத்தைத் திறந்து வைத்தார்.

தில்லை விளாகம்

(தஞ்சை)

தில்லை விளாகம் கிளை நூலகத்தில் 11-12-69 மாலை 4 மணிக்கு தஞ்சை மாவட்ட நூலக ஆணைக்குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திரு. ந. தருமலிங்கம், எம்.எல்.ஏ. அவர்களுக்குப் பாராட்டு விழா நடைபெற்றது. திரு. இல. அருணாசலம் தலைமை வகித்தார். பல அறிஞர்கள் பாராட்டினார்கள். துணை நூலகர் ந. குழந்தைவேலு, உதவியாளர் சி. கிருஷ்ணமூர்த்தி அனைவரையும் வரவேற்றனர்.

புத்தக விமரிசனம்

ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம்

பிரபல ஸம்ஸ்கிருத தோத்திரத்தின் ஹிந்தி மொழிபெயர்ப்பு; சரளமாக அமைந்திருக்கிறது. கூடியவரைக்கும் பொருள்சிதைவு இல்லாமல் ஹிந்தியாக்கம் அமைந்திருக்கிறது. ஆனால் மூலத்தின் ஜீவனான ஓசை லயம்? அதற்கு மூலமே புகல்.

நூல்:

ஸ்ரீ வேங்கடேச சுப்ரபாதம்

(ஹிந்தி மொழிபெயர்ப்பு)
மொழி பெயர்த்தவர்!
கவிரத்ன ஹா. சி. வாலம்

வெளியீடு: தைவிக வாழ்க்கை சங்கம், 23, வைகுண்டப்பெருமாள் தெரு, காஞ்சிபுரம்-2.

கரைந்த நிழல்கள்

கவர்ச்சி மிகுந்த திரையுலகம் பற்றிய ஒரு சுவையான நாவல் இது. வீட்டைக் கட்டுவது, கல்யாணம் பண்ணுவதுபோலத் திரைப்படம் எடுப்பதும் ஒரு மனிதனின் சக்தியின் பெருமளவை ஆட்கொள்ளும் செயல். அத்தகைய திரைப்படம் எடுக்கும் நுணுக்கத்தை ஒரு சிறு துரும்புவிடாமல் அழகாக எழுத்துருவத்தில் வடித்திருக்கிறார் ஆசிரியர்.

நடராஜ் ஒரு படக்கம்பெனி மானேஜர். ஒரு அவுட்டோருக்கு அவன் ஏற்பாடுகள் செய்யும் வேகத்துடன் கதை ஆரம்பிக்கிறது. அதிலிருந்து கதை ஒரு சுவாரஸ்யமான திரைப்படம் போல ஓடுகிறது. ராஜ்கோபால் இக்கதையின் மற்றொரு முக்கியமான பாத்திரம். நடராஜ் தான் உழைக்கும் படக் கம்பெனிக்கு உழைத்து அதனால் அடையும் பலன் (!) அதேபோல ராஜ்கோபால் வாழ்வில்ஏற்படும் திருப்பம் பற்றி ஆசிரியர் தனக்கே உரிய அமைதியான நடையில் ஒரு நல்ல நவீனம் வடித்திருக்கிறார்.

'கரைந்த நிழல்கள்' சில தமிழ் படங்கள்போல வாழ்வின்சொகுசான பக்கத்தை மட்டும் காட்டவில்லை. திரைப் படத்துறையில் எப்படி படாதிபதி முதல் லைட்பாய் முடிய, பெரிய காட்சிஸெட் முதல் ஒரு பிடித்துண்டுவரை ஒவ்வொருவரும், ஒவ்வொன்றும் தவிர்க்கமுடியாதவை என்று பிரத்தியட்ச ரீதியில் அணுகியிருக்கிறார். இன்றைய திரைப் படத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்குத் தெரியும் 'இது ஒரு தத்ரூபமான நூல்' என்று.

கரைந்த நிழல்கள் - அசோக மித்திரன்—மல்லிகைப் பதிப்பகம், தி. நகர் — சென்னை-17. விலை ரூ. 3—50. பக்கம் - 168.

பச்சை மரம்

திரு. சேது சுந்தரத்தின் 'பச்சை மரம்' ஒரு சுவையான நாவல். கிராமம், நகரம் இரு இடங்களிலும் 'பச்சை மரக்' கதை வளருகிறது.

கீதா பிறப்பில் கிராமத்தைச் சேர்ந்தவள். பட்டணத்தில் கல்லூரியில் படிக்கிருள். கல்லூரியில் அவளுக்கு ராமுவுடன் நட்பு ஏற்படுகிறது. ஆனல் ராமுவின் வாழ்வை விதி திசை திருப்பி விடுகிறது. கீதா சோமுவை மணந்து மணவாழ்வை ஒரு ஆவேசத்தோடு ஏற்கிருள். ஊழ்வினையால் சோமு சிறை புக, கீதா பட்டணத்தில் ஒரு வீட்டில் அடைக்கலம் புகுகிருள். அந்த வீட்டு எஜமானனுக ராமுவைக் காண்கிருள்! பிறகு......

'பச்சை மரம்' படித்தால் தெரியும். ஆசிரியரின் கற்பனைத்திறம் ஆங்காங்கே பளிச்சிடுகிறது.

'பச்சை மரம்' – சேது சுந்தரம் விலை ரூ. 3- பக்கம் 160 சேது பதிப்பகம் - வடபழனி சென்னை-26.

—ஸ்ரீ வித்யா

சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

ஸ்ரீ ஆண்டாளின் வரலாற்றை நாடக வடிவில் வழங்குகிறது இந்நூல்.

'கோதையின் பக்தி வரலாற்றை யாவரும் உணர்ந்து, இறையருளுக்குப் பாத்திரமாதல் வேண்டும்' எனும் நோக்கமுடன் இந்நாடகத்தை அமைத்துள்ளதாக ஆசிரியர் கூறுகிருர். நோக்கம் போற்றத் தக்கதே. ஆனல் அது ஈடேறுவதற்கு அவர் கூறியுள்ளதைவிட, கூருமல் விட்ட விஷயங்களே மிகுதியாக உள்ளன. ஆண்டாள் சரித்திரமென்று தனியாக ஒரு நூல் இல்லாமற்போனுலும், திருப்பாவைப் பாடல்களின் வாயிலாகவும், நாச்சியார் திருமொழிப் பாடல்களின் வாயிலாகவும், ஆண்டாளின் வாழ்க்கைச் சிறப்பினை நாம் நன்கு தெரிந்து கொள்ள முடிகிறது. இவற்றில் விடுபட்ட நிகழ்ச்சிகள் பெரியாழ்வாரின் பாசுரங்களின் வாயிலாக வெளிப்படுகின்றன இவற்றைப் புறக்கணித்துவிட்டு வரையப்படும் எந்த நூலும் ஆண்டாளின் சிறப்பைச் சரிவர எடுத்துக்காட்டுவதாக இருக்க முடியாது.

திருப்பாவையிலிருந்து ஆறு பாடல்களும், நாச்சியார் திருமொழியிலிருந்து நான்கு பாடல்களுமே, இந்நூலில் இடம் பெற்றுள்ளன. திருப்பாவை ஒரே ஒரு நிகழ்ச்சியையே வெளிப்படுத்துகிறது. ஆனல் நாச்சியார் திருமொழிப் பாடல்களோ ஆண்டாளின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களைச் சித்தரித்துக் காட்டுகின்றன. நூலாசிரியர் இவற்றில் அதிகக்கவனம்செலுத்தாதது ஒரு குறையேயாகும்.

ஒரு மகானின் வரலாற்றை வரையும்போது, அன்னுருடைய மொழிகளே சிறப்பிடம் பெற வேண்டும். பெரியாழ்வார் பாசுரங்கள் இதில் இடம் பெற்றது பொருத்தமேயாயினும், தொண்டரடிப் பொடி ஆழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கை ஆழ்வார், ஆகியோரின் பாடல்களும் இந்நாடகத்தில் இடம் பெற்றிருப்பது, அவ்வளவு பொருத்தமில்லை என்றேதோன்றுகிறது. தொண்டரடிப் பொடி ஆழ்வாரும், திருமங்கை ஆழ்வாரும் பிற்காலத்தவர். அவர்களுடைய பாடல்களை ஆண்டாள் பாடுவதாகக் காண்பித்திருப்பது (காட்சி-12, பக்கம் 31, 32) சரியல்ல. திவ்யப் பிரபந்தப் பாடல்களிலே பரிச்சயமுள்ளவர்கள் ஒரு சிலரே இருப்பாராகையால், இப்பாடல்கள் (திரைக்குப்பின் பாடுவதாகக் கொடுக்கப்பட்டுள்ளவை உட்பட) இன்னுருடை

யவையென்று அடிக்குறிப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்நூலைப் படிப்பவர்களில் பலர், இப்பாடல்கள்அனைத்துமே ஆண்டாள் பாடியவை என்று கருதவும் கூடும். இதற்கெல்லாம் மேலாக, ஆசிரியரே ஒரு பாடல் புனைந்து, அதைப் பெரியாழ்வாரைக்கொண்டு பாட வைத்திருக்கிறார்! (காட்சி 9 – ''அன்பே மலராக'') கொடேஷன் குறிகளுக்குள் அடைந்திருப்பதைக் கொண்டு ஆசிரியர் திருப்தி அடைவதாக இருக்கலாம். ஆனால் இந்நூலைப் படிக்கும் சாதாரண மக்கள் இதுவும் பெரியாழ்வாரின் பாசுரம் என்று தான் எண்ணுவார்கள். இது ஆசிரியர் இழைத்த பெருங்குற்றமென்றே நான் கருதுகிறேன்.

விஷ்ணு சித்தர் பாண்டிய மன்னன் அவையில் எடுத்துரைப்பதாகக் கொடுக்கப்பட்டுள்ள தத்துவ விளக்கம் (பக்கம் 8, 9) தெளிவாக இல்லை. ''நீறு பூத்த சாம்பல்'' போன்ற புதுமையான சொற்றொடர் ஒரு சிலவும் இந்நூலில் காணப்படுகின்றன. பக்தியைப் பரப்பும் எந்த முயற்சியும் வரவேற்கத் தக்கதேயாகும். மேலே குறிப்பிட்ட குறைபாடுகள் இருப்பினும் ஆசிரியரின் முயற்சி வரவேற்கத் தக்கதே.

ஆசிரியர்: கே. எஸ். மணவாள அய்யங்கார் பி. ஏ., பி. டி., சுகந்தாவெளியீடு, 13, இராயர் தெரு, திருவத்திபுரம் (வடாற்காடு மாவட்டம்) விலை ரூபாய் 1-25.

—சௌமியன்

தந்திர பூமி

இப்புதினத்தின் அறிமுகத்தில் எக்ஸிஸ்டென்ஷியலத்தில் சரணடைவது இவ்வாசிரியரின் குறிக்கோளில்லை என்கிறார் 'சுஜாதா'. இருப்பினும் இந்நூலை வாசிக்கும் பொழுது ழான் பால் ஸார்த்தரேயின் நூல்கள் நம் நினைவுக்கு வராமல் இரா. நாகரீகம் முற்றி தலைவிரித்தாடும் நம்தலைநகரிலும் மற்றும் பாரதத்தின் முக்கிய நான்கைந்து பட்டணங்களிலும் 'ஸொபஸ்டிகேடட்' எனக்கூறப் படும் ஒரு சாராரின் அன்றாட வாழ்க்கையின் பிரதிபலிப்பையே இந்நூலில் காண்கிறோம்.

துடிப்பான நடையில், சற்றுத் துணிச்சலுடன் வாசகரின் ஆவலைத் தூண்டும் வகையில் வெற்றியுடன் எழுதியிருப்பது ஆசிரியரின் திறமைக்குச் சான்றாகும். ஆனால் ஆழ்ந்த ஆங்கில அறிவுள்ளோரால் மாத்திரமே இந்நூலைப் பூரணமாக ரஸிக்க முடியும்.

சக்கையாய்ப் போன விஷயங்களையே திரும்பத் திரும்ப அசை போடும் ஆசிரியர்களின் படைப்புகளைப் படித்து அலுத்துப்போன தமிழ் வாசகனுக்கு, 'தந்திரபூமி' ஒரு நல்ல மாற்று.

புதிய, புதிய நூல்களை வாங்கி வைக்க ஆவலுள்ள நூலகங்களில் இது கட்டாயம் இடம் பெற வேண்டும்.

ஆசிரியர்: இந்திரா பார்த்தசாரதி. தமிழ்ப் புத்தகாலயம்: சென்னை-5. அக் '69. விலை: ரூ. 5-50. பக்கங்கள்: 290.

— ல. கி.

தேவதைகளும் சொற்களும்

தற்காலத்தமிழிலக்கிய சிருஷ்டிகர்த்தாக்களில் சிறந்தவர்களில் ஒருவரான நா. பார்த்தசாரதி அவர்களின் சிறுகதைத்தொகுப்பு இது. 'சிறுகதை என்பது நிமிஷத்தை நித்தியமாக்குவது'

என்பதற்கேற்ப விநாடியை நித்தியமாக்கும் சம்பவங்கள் வரும் வகையில் அமைக்கப்பட்ட கதைகள் என்று ஆசிரியரே முன்னுரையில் விளக்குகிறார். ஆசிரியரின் திறமைவிளங்கும் வகையில் கதைகள் அமைந்திருக்கின்றன என்பதில் சந்தேகமில்லை. அவரே முன்னுரையில் சொல்லியிருப்பது போல வேறு வேறு நயங்கள் அமைந்த— அமைக்கப்பெற்ற, கதைகள் இவை. ஒவ்வொன்றும் ஒரு சிறுகதையின் 'லக்ஷணங்கள்' அனைத்தும் கொண்டதாக இருக்கிறது.

முதலிரண்டு கதைகளாகிய ''தேவதைகளும் சொற்களும்'' ''தோனி'' இவ்விரண்டும் ஒரு வகையைச் சேர்ந்தவை. முதலாவதில் அழகை விவரிக்கச் சொற்களை எங்கெங்கோ, எந்த எந்த அனுபவங்களிலோ, தேடியலையும் கவிஞனுக்கு திடீரென்று அவை கிடைக்கும் சம்பவத்தை கவிநயம் ததும்ப விவரித்திருக்கிறார். ''தோனி''யில் சொற்களின் நயத்தைப் பற்றியும், பெறும் சொற்களை மட்டுமே வைத்துப் பந்தல் போடுவதின் பேதமையையும், பொங்கித் ததும்பும் கிண்டலுடன் எடுத்துக் காட்டுகிறார். அவர் கிண்டல் செய்யும் போக்குகளை இன்றைய வாழ்க்கையில் நம்மால் அடையாளம்கண்டு கொள்ள முடிவது கதைக்கு மேலும் சுவையூட்டுகிறது. இவ்விரண்டுமே இத்தொகுப்பில் சிறந்தவை எனச் சொல்லலாம். மூன்றாவது கதையாகிய சண்பகப் பூவும்லண்டன் ஸ்கூலும் என்னும் கதையும் இந்த இரண்டினுடைய அடிப்படையை உடையதே என்பது ஆசிரியருடைய கூற்று.

வியாபாரத்தில் புகவேண்டிய இளைஞன் கவிதையிலும், இயற்கையின் அழகிலுமே ஈடுபட்டிருப்பதைச் சித்தரித்திருப்பது கவி நயத்தை, கவிதைப் போக்கை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கலாம். ஆனாலும், மற்ற இரண்டினுடைய நயம் இதற்கில்லை. கதை எதிர்பார்க்கக்கூடிய ஒரு சாதாரண வகையிலேயே வளர்ந்து முடிகிறது.

மற்றக் கதைகள் எல்லாம், ஆசிரியருடைய ''நிமிஷம் நித்யமாகும்'' சித்தாந்தத்தை எடுத்துக்காட்டுவதற்கெனவே எழுதப்பட்டன போல் இருக்கின்றன. கதையின் மூலம் இந்த உண்மை தானாகவே, நம்உள்ளுணர்வுக்குப் புலனாகும் வகையில் தெரிய வேண்டுமே ஒழிய இதைத் தெரிவிக்க எழுதுவதுபோலக் கதைகள் அமைந்தால் ரஸிக்காது. ஒரு சில கதைகளைக் குறிப்பிட்டு இவை ''எப்படிப்பட்ட வாசகரையும் மனதைப் பிசைந்து, கண்களில் நீர் நெகிழச் செய்துவிடும் என்பதில் சந்தேகமில்லை'' என்று ஆசிரியரே முன்னுரையில் சொல்கிறார். இக்கதைகளோ இதற்கெனவே எழுதப்பட்டது போல் தோற்றமளிக்கின்றன. சம்பவங்களும், கதாபாத்திரங்களும் ஆங்கிலத்தில் Stereotyped என்று சொல்வதுபோல், சாதாரணக் கதைகளில் வழக்கமாக எதிர்பார்ப்பதுபோல் இருக்கின்றன. ஸ்ரீ பார்த்தசாரதி போன்ற ஒரு திறமை வாய்ந்த, சிறந்த ஆசிரியரிடம் இது ஒரு குறையே.

தமிழ்க்கதைகளில் நடுவே ஆங்கிலத்தை புகுத்துவதில் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்பதற்கு ''சண்பகப்பூவும் லண்டன் ஸ்கூலும்'' ஒரு சிறு எடுத்துக்காட்டு.

— க. வே. ரா.

புதிய புத்தகங்கள்

725 சிவலிங்க வழிபாடு Q —K9

ஆசிரியர் : சி. சத்தியமூர்த்தி. வெளியீடு ; S. சத்தியமூர்த்தி c/o ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட்ரோடு, நாகர்கோவில்-1. (Research Assistant, Department of Tamil, University of Kerala, Trivandrum-1. (Kerala State.) *1969. பக்கம் : 118. விலை : ரூ. 2-00. வகை : சமயம், ஆராய்ச்சி.*

726 சூடிக் கொடுத்த சுடர்க் கொடி Q —w2K9

ஆசிரியர் : K.S. மணவாள அய்யங்கார். வெளியீடு : சுகந்தா வெளியீடு, *13*, இராயர் தெரு, திருவத்திபுரம். (வடாற்காடு ஜில்லா.) *1968. பக்கம் : 46. விலை : ரூ. 1-25. வகை : சமயம், நாடகம்.*

727 வலம்புரி சங்கு 031, 3N32, V K6

ஆசிரியர் : நா. பார்த்தசாரதி, வெளியீடு : தமிழ்ப்புத்தகாலயம் *576*, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை-5 நவம்பர், *1969. பக்கம் : 176. விலை : ரூ. 5-00. வகை :* சிறுகதைத் தொகுதி.

728 தந்திர பூமி 031, 3N ,T K9

ஆசிரியர் : இந்திரா பார்த்தசாரதி. வெளியீடு : தமிழ்ப் புத்தகாலயம், **576**, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5. அக்டோபர் 1969. பக்கம் : **290**, விலை : ரூ. 5-50. வகை : நாவல்.

729 பானை நிறைய அறிவு 031, 3x K9

ஆசிரியர் : நெ, சி. தெய்வசிகாமணி, வெளியீடு : தமிழ்ப் புத்தகாலயம், *576*, பைகிராப்ட்ஸ் ரோடு, சென்னை-5. நவம்பர் *1969. பக்கம் : 48. விலை : ரூ. 1-00.* வகை : சிறுவர் கதை.

730 மனித வரலாற்றில் மூன்று லட்சம் ஆண்டுகள் Y —K9

ஆசிரியர் : எச். செல்வராசன், வெளியீடு. தாய்நாடு நூலகம் *137*, பீட்டர்ஸ் சாலை, சென்னை-14. *1969.* பக்கம் : *128.* விலை : ரூ. *2-40.* **வகை : மனித வரலாறு.**

731 போர்க் கோலம் 031, 3N , P K9

ஆசிரியர் : செ. கணேசலிங்கன். விற்பனை உரிமை : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை-1. நவம்பர், 1969. விலை : ரூ. 4-75. வகை : நாவல்.

732 கரைந்த நிழல்கள் 031, 3 , K9

ஆசிரியர்: அசோக மித்திரன். வெளியீடு: மல்லிகைப்பதிப்பகம் 15, நாநாராவ் நாயுடு தெரு, தி. நகர், சென்னை-17. நவம்பர், 1969. பக்கம்: 168. விலை: ரூ. 3-50. வகை: நாவல்.

733 சோழன் பூர்வ பட்டயம் கூறும் கொங்குநாட்டு ஊர்கள் Y441 —K9

ஆசிரியர் : சி. நாச்சிமுத்து. வெளியீடு, விற்பனை உரிமை : ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட் ரோட், நாகர்கோவில்-1. 1969. பக்கம்; 148. விலை: ரூ 2-50. வகை: சரித்திரம்—ஆராய்ச்சி நூல்.

734 டாக்டர் நிர்மலா O31, 3NVE, N K9

ஆசிரியர் : எம். வி. வெங்கட்ராம். வெளியீடு : வானதி பதிப்பகம், தி. நகர், சென்னை-17. அக்டோபர், 1969. பக்கம் : 276. விலை : ரூ. 4-50. வகை : நாவல்.

735 மோகம் முப்பது ஆண்டு 031,3NNE, M K9

ஆசிரியர் : நீல பத்மநாபன். விற்பனை உரிமை : ஜெயகுமாரி ஸ்டோர்ஸ், கோர்ட் ரோட், நாகர்கோவில்-1. டிசம்பர், 1969. பக்கம்; 125, விலை: ரூ 2-50. வகை: இலக்கியம்—சிறு கதைகள்.

736 மங்கல வளையல் 0 , 3NKA, M K8

ஆசிரியர் : கர்தார்சிங் துக்கல். தமிழாக்கம் : சௌரி. வெளியீடு : ராதா பதிப்பகம், சென்னை-17. ஆகஸ்டு, 1968. பக்கம்: 160. விலை: ரூ. 3-00. வகை: இலக்கியம்: குறுநாவல்.

Edited by : KUYILAN (G. Ramalingam)
and Printed by Kondah. Kasi. Seetharamon at Sree Agastya Printers
85, III Main Road, C.I. T.Nagar (Ext.) Madras-35
For the Publishers "Bibliopole"
14, Thanikachalam chetty Road; Madras-17.